Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. லக்ஸி
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு குமாரதரன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
New Master Institute
B.M.C Lane, Jaffna.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ2/-

நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
(PURE & APP
10.00 - 12.00 (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு புரட்டாதி மீ 25 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 6 (11-10-1986) SANJEAVY: REGENERATIVE TAMIL WEEKLY இதழ் :38

## கருத்துக் கலசம்

### அன்னை அருள்

இது நவராத்திரி காலம். சக்தி வழிபாட்டுக்குரிய சிறப்பான காலங்களில் ஒன்று இன்று கல்வித் தெய்வம்—கலைத்தெய்வம் கலைமகளின் இறுதி நாள் விழா சாதாரணமாக சரஸ்வதி பூசை என்று வழங்கப்படும் நாள்

சக்தி என்பதற்கு ஆற்றல் என்று பொருள் உலகத்தை உயிரினங்களை எம்மை அறியாமலே இயக்குகின்றும் ஒருசக்தி இருக்கிறது. ஆற்றல் இருக்கின்றது அதனையே இயற்கை என்றும் செல்கிறோம்.

அந்த இயற்கையை—ஆற்றல் சக்தியை பெண் தெய்வமாகக் கண்டபெருந்தகைவம் இந்து மதத்துக்கு உரிய சிறப்பு சக்தியை அன்னையாகக் காண்கிறோம்.

அந்த அன்னையே எமக்கு வீரத்தையும் செல்வத்தையும். கல்வியையும், தருபவளாகச் சிருஷ்டித்து வணங்குகிறோம்; விழா எடுக்கின்றோம்.

ஈழத்துத் தமிழ் மக்களுக்கு இன்று மூன்று செல்வங்களும் நிறையத் தேவைப்படுகின்றன. எப்போதையும் விட இவை பெருவளில் அவசியமாகின்றன.

வீரம்— விடுதலை அடக்கி வைக்கப்பார்க்கும் அரக்கத்தனத்தை வெல்வதற்கு வீரம் வேண்டி இருக்கிறது

அடிமைப்படுத்த அநியாயத்தால் தான் வெல்ல முடியும் என்று நம்பக்கூடாது. அக்கிரமத்தை விவேகத்தாலும் வீரத்தாலும் தான் நிரந்தரமாக வெல்ல முடியும்.

வீரத்துக்குத் துணையாக விவேகம் அவசியம் அந்த விவேகம் வளரக் கல்வியும் ஏனைய கலைகளும் தெரிந்திருக்க வேண்டும்.

வீரமும், கல்வியும் சமூகநலம் செழித்து வளர்வதற்கு நிதி வளம் பிரதானம். நிதிவளம் என்பது வெறும் பணம் கட்டும் அல்ல, நாணயம் அல்ல. பொருளாதாரமே அந்தப் பிரதான செல்வம் அதனையும் வளர்க்க வேண்டிய—பெருக்க வேண்டிய அவசியம் எமக்கு உண்டு

ஈழத்தமிழர் எல்லோரும் அடிமை வாழ்வு நீங்க வேண்டும் என்ற தமது எண்ணம் நிறைவேற அன்னையைத் துதிப்போடு செயலிலும் இறங்கவேண்டும்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும்;
-பாரதி

# போராளிகள் மீது நிர்ப்பந்தம் இராது

## எம். ஜி. ஆருக்கு ராஜீவ் உறுதி?

புதுடில்லி, அக்டோபர்: 11

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் தமிழ்ப் போராளிகள் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கும் எண்ணம் இந்திய அரசுக்குக் கிடையாது.**

பிரதமர் ராஜீவ் காந்தியை நேற்று வெள்ளிக்கிழமை புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரனிடம் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறிய வருகிறது.

இச்சந்திப்பின்போது, இலங்கை அரசு— கூட்டணிப்பேச்சுக்களின் பெறுபேறுகள், தொடர்ந்து இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட உருவாக்கங்கள், அவை குறித்து தமிழ்ப் போராளி அமைப்புக்கள் கொண்டுள்ள மனநிலை என்பன சம்பந்தமாக முதலமைச்சர் இராமச்சந்திரன், பிரதமரிடம் எடுத்துச் சொன்னார் என்று அறிய வருகிறது.

இலங்கை அரசு சமர்ப்பித்த இறுதி உருவாக்கங்கள் குறித்து கூட்டணி எடுத்துள்ள இறுதி நிலை குறித்த அபிப்பிராயங்களை அவரது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி போராளி அமைப்புக்களிடம் இருந்து பெற்றுத் தரும்படி, முதலமைச்சர் இப் பேச்சுக்களின்போது கேட்டுக்கொள்ளப்பட்டார் என்றும் தெரிகிறது.

இம்மாதம் 13ஆம் திகதி வெளிநாடு பயணமாகும் பிரதமர் காந்தி, 23ஆம் திகதி நாடு திரும்புவார்.

பிரதமர் நாடு திரும்பியதும் போராளிகளின் கருத்துக்களைச் சமர்ப்பிக்கும்படி முதலமைச்சர் கோரப்பட்டார் என்றும் தெரியவருகின்றது.

முதலமைச்சர் சென்னை திரும்பியதும், சகல போராளிக் குழுக்களுடனும் விரிவான அடிப்படையில் பேச்சுக்களை மேற்கொள்வார் என்று இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு உதவுவதற்காக அரசமைப்புச் சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன் சென்னையில் தங்கியிருப்பார்.

இப்போது புதுடில்லி செல்லும் முன்னர் முதலமைச்சர் பேச்சுக்களில் கலந்துகொள்வது குறித்துத் தீவிர போக்குக் கொண்டவர் என்று கருதப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுடனும் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பது தெரிந்ததே.

நேற்று இடம்பெற்ற ராஜீவ் – எம். ஜி ஆர். சந்திப்பின்போது உள்துறைஅமைச்சர் பூட்டா சிங்கும் தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் கலந்துகொண்டனர்

புதுடில்லியில் நடந்த தமிழக ஆளுநர் குரானாவின் மகனின் திருமண வைபவத்திலும் முதலமைச்சர் இராமச்சந்திரன் கலந்துகொண்டார். (அ-ஐ-எ)

## மன்னாரில் துப்பாக்கி பிரயோகம்

மன்னார், அக். 11

கடந்த வியாழன் இரவு மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட சமயம் மன்னார் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் எவரும் காயமடையவில்லை

வெடிச்சத்தங்களினாலும் அதிர்ச்சியினாலும் மாரடைப்புக்கு இலக்காகியிருந்த ஜோசப் (இளஞ்சிங்கம்) என்ற 53 வயது நபர் பனங்கட்டிக்கொட்டில் என்ற இடத்தில் மரணமானார். (உ)

## மூவர் காயம்

யாழ்ப்பாணம், அக் 11

நேற்று யாழ் கோட்டையில் இருந்தும் மண்டைதீவில்இருந்தும் மேற்கொளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாக மூவர் காயமடைந்தனர்

கணபதி தங்கராசா (54 வயது), பருது இராஜன் (40 வயது), சின்னப்பொடியன் பொன்னுத்துரை (30 வயது) ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் மூவரும் கொட்டடியைச் சேர்ந்தவர்கள் (உ-10)

வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்



வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

— மகாகவி பாரதியார்

## பெருமாள் கோயிலில் இன்னிசை

யாழ்ப்பாணம், அக் 11

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழாவையும், புரட்டாதிச் சனி உற்சவத்தையும் முன்னிட்டு இன்று மாலை தேவஸ்தானத்தில் அமைக்கப்பெற்ற விசேட அரங்கில் இன்னிசை வேந்த' பொன் சுந்தரலிங்கம் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெறும். (உ-எ)

## அணிவகுப்பில் ஈடுபட்ட சிப்பாய்கள் மீது புளொட் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக்.11

இராணுவத்தின் 37 ஆவது ஆண்டு தினத்தை யாழ் கோட்டை முகாமில் கொண்டாடிக் கொண்டிருந்த சிப்பாய்கள் மீது 'புளொட்' போராளிகள் எம் 84 தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை எட்டு மணி அளவில் கோட்டை மைதானத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்களின் அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது.

இதேவேளை கோட்டைக்குள் ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டு அதிக சத்தத்துடன் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன.

இதனையடுத்து 'புளொட்' போராளிகள் அவதானமான முறையில் எம் 84 தாக்குதலை கோட்டைமீது மேற்கொண்டனர்.

இத்தாக்குதலை அடுத்து அங்கு நடைபெற்ற உரைகளும் ஒலிபெருக்கிப்பாடல்களும் நிறுத்தப்பட்டன. (உ-10)

## போர் நிதிக்கான சுவீப் விற்பனை ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக் 11

தமிழ் ஈழ இராணுவத்தின் போர்நிதிக்கான மாதாந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நேற்று யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ். பேராலய கட்டளைக்குரவர் பிதா ஜெபநேசன் தமிழ் ஈழ இராணுவ தளப் பொறுப்பாளர் திரு நந்தனிடம் முதல் டிக்கட்டை பெற்றுக் கொண்டு ஆசி வழங்கினார்

இதனையடுத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு அதிகம் பெறுமதியான அதிஷ்டலாபச் சீட்டுகள் நேற்று உடனடியாக விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## எழுத்தாளர் மாநாடு வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 11

இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்கம் நடத்தும் எழுத்தாளர்மாநாடு நாவலர் கலாசாரமண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூரணைதினத்தன்று நடைபெறும்.

காலையில் மாநாட்டை யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ் வித்தியானந்தன் தொடக்கி வைப்பார்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் நூற் கண்காட்சியைத் திறந்து வைப்பார். திரு வரதர் மங்கல விளக்கேற்ற பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையுரை நிகழ்த்துவார்,

நிகழ்ச்சிகள் விவரம் உதயனில் வெளியிடப்படும். (-எ)

## வவுனியாவில் 200 பேர் விசாரணையில்

வவுனியா, அக். 11

நேற்றுக் காலை வவுனியா பஸ் நிலையத்திலும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலும் நடமாடிய 200 க்கு அதிகமான பொதுமக்களை ஆயுதப்படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்,

வயோதிபர்கள் கூட விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினமும் மகாறம்பைக்குளத்தில் ஆயுதப்படையினர் சோதனை நடத்தி பொதுமக்களை மாலைவரை முழங்காலில் நிறுத்தி வைத்தனர். சிலர் சிறுடையினரால் நையப் புடைக்கப்பட்டனர்.

இது பற்றி வவுனியா அரச அதிபரிடம் முறையிடப்பட்டது. (உ-எ)

### சுபநேரம்

11 — 10 — 1986
சனிக்கிழமை

சுபநேரம்!
3-02முதல் 4-32வரை

ராகுகாலம்!
9 02முதல் 10-32வரை

இவை பலருக்கும் இங்குக்கும் பொருந்தும்

சரஸ்வதி பூஜை
கேதார கௌரி விரதாரம்பம்

## சிறுகால இடைவெளியின் பின்னர்

# யாழ். நகரத்தில் நேற்று மீண்டும் ஷெல் தாக்குதல்

## சிப்பாய்கள் வெளியேவர புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக்.11

சிறுகால இடைவெளியின் பின்னர் யாழ் நகரத்தில் நேற்று மீண்டும் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து வெளியேற முயன்ற சிப்பாய்கள்மீது புலிகள் ஆறு அங்குல ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் சிப்பாய்கள் சிலர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணி அளவில் யாழ் பண்ணைப் பொலீஸ் விடுதியில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் ஆயுதங்கள் சகிதம் கொட்டடிப் பக்கமாக வெளியேற முற்பட்டனர்.

இதனை அவதானித்த விடுதலைப் புலிகள் சிப்பாய்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கோட்டையில் இருந்து கொட்டடிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து உடனடியாக விரைந்து செயற்பட்ட விடுதலைப் புலிகள் கோட்டைமீதும் அங்கிருந்து வெளியேற முயன்ற சிப்பாய்கள் மீதும் ஆறு அங்குல ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஷெல் தாக்குதல்களினால் சிலர் காயமடைந்ததாகவும் இதனையடுத்து சிப்பாய்கள் முகாமுக்கு திரும்பிச் சென்றதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த சிப்பாய்களை ஏற்றிச்செல்ல வந்த ஹெலிக்கொப்டரில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் ஹெலிக்கொப்டரை நோக்கி புலிகள் தாக்கியதை யடுத்து அது உயரஎழுந்து பறந்து சென்றது.

இச்சம்பவத்தினால் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. (உ-10)

## றேகன் கொர்பச்சேவ்

ரெயாவிக், அக். 11

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றேகனும், ரஷ்யத் தலைவர் திரு. கொர்பச்சேவ்வும் இன்று சந்தித்துப் பேசுவதற்காக நேற்று ஐஸ்லாந்தின் தலைநகரான ரெயாவிக் வந்து சேர்ந்தனர். (அ)

## சாம்பல்தீவு, சல்லியில் தமிழர் வீடுகள் கொள்ளை

திருகோணமலை, அக்.11

சாம்பல்தீவு, சல்லி ஆகிய கிராமங்களில் பட்டப்பகலிலேயே தமிழர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் ட்ராக்டர்களில் ஏற்றப்பட்டு கொண்டு போகப்படுவதாக திருமலை பிரசைகள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

ஸ்ரீமாவோபுரஎன்னும் பகுதியில் இருந்து வந்து இக்கொள்ளைகள் நடத்தப்படுவதாக பிரசைகள் குழுவிடம் கூறப்பட்டு உள்ளது.

சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வீடுவாசல்களை விட்டு நிலாவெளி மகா வித்தியாலயம். தேவாலயம் சாம்பல்தீவு தேவாலயம் ஆகிய பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் வீடுகளுக்குச் செல்ல இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

அந்த நிலையில் இக்கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனிடையில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட சித்தார் வாசிகளான 36முஸ்லிம்களும் விடுவிக்கப்பட்டு விட்டனர். அத்துடன் சாம்பல்தீவைச் சேர்ந்த 4 தமிழரும் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 60 தமிழரும் இன்னும் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் ((உ-எ)

புதுமையும் எழிலும் வாய்ந்த பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் ராஜீவை கொலை செய்ய அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சி, இந்தியாவின் குழப்பநிலை ஏற்படுவது 'ஒரு குண்டுத் தொலைவில்' தான் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அது பற்றிய ஒரு கண்ணோட்டமே இக் கட்டுரை

# ராஜீவை பாதுகாத்தால்தான் இந்தியாவுக்குப் பாதுகாப்பு

## அவரை இழந்தால் இந்தியா சிதறும்

புதிலிருந்து புறப்பட்டன குண்டுகள். ஆனால் அவை திட்டமிட்ட இலக்கை அடையத் தவறிவிட்டன.

துரதிருஷ்டவசமாக அடைந்திருந்தால் ...... உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமைக்குரிய இந்தியாவின் நிலை என்னவாயிருக்கும்?

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அக்டோபர் 2 காலை காந்தி சமாதிக்கு முன்னால் அமர்ந்து இருந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் அமைதியைக் கலைத்தன இக்குண்டுச் சத்தங்கள்

சில நிமிடங்களில் தாரதர்ஷன், உயிர்தப்பிய பிரதமர் ராஜீவை பல கோணங்களில் இந்திய மக்களுக்குக் காட்டியது.

பிரதமர் உயிர்தப்பி விட்டார் என்பதை உறுதிப்படுத்திவிட வேண்டும் என்பதில் தாரதர்ஷன் அவசரப்பட்டது.

ஒரு பிரச்சினையுமே இல்லை —இப்படி அமைதியாகச் சொன்னார் பிரதமர் ராஜீவ்.

பிரச்சினை இல்லை என்று சொன்னதாலே பிரச்சினை எழவில்லை.

பிரதமரின் அவசரம் விளங்கிக் கொள்ளக் கூடியது

சீக்கியர்களினால் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைத் தொடர்ந்து 2,700 சீக்கியர்கள் உயிரிழந்தனர்

அவர்களில் ஒருவரின் சகோதரன் காம்ஜிட்சிங் அவர் தான் ராஜீவைக் கொலை முயற்சித்தான்

அதிர்ஷ்டவசமாக பிரதமர் ராஜீவை குண்டு தாக்கவில்லை இதனால் புதுடில்லி அமைதியாக இருந்தது.

நாட்டின் ஒற்றுமை ஒரு தனி மனிதனின் உயிரில் தங்கியுள்ளது என்பதையே இது காட்டுகின்றது

நேரு குடும்பம் 39 ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்து வருகிறது. இடையிலே



ஒரு 4½ ஆண்டுகாலம் ஜனதா கட்சி ஆட்சி புரிந்தது

பண்டிதர் ஜவகர்லால் நேரு 17 ஆண்டுகள் பிரதமராக பணியாற்றினார்.

அவரின் மகள் இந்திரா காந்தி 16 ஆண்டுகள் பிரதமராக விளங்கினார்.

அவரின் அரசியல் வாரிசாகக் கருதப்பட்ட சஞ்சய் காந்தி, அவர் இறப்பதற்கு முன்னரே விபத்து ஒன்றில் காலமானார்.

இந்திராவின் மறைவின் பின்னர் 40 வயதான ராஜீவ் பிரதமரானார்.

அரசியல் அனுபவம், அரசியல் அத்திவாரம் ஒன்றுமே ராஜீவிடம் அப்போது இல்லை;

'காந்தி' என்ற பெயரின் கவர்ச்சி தான் இருந்தது.

ராஜீவின் குழந்தைகள், குடும்ப ஆட்சியைக் கொண்டு நடத்தக்கூடிய வயதினர் அல்லர்.

அப்படியானால் அக்டோபர் 2 இல் புதிலிருந்து புறப்பட்ட குண்டுகள் திட்டமிட்ட இலக்கை அடைந்து இருந்தால்... 80 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவின் நிலை என்ன?

ராஜீவ் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டால் யாராவது ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுத்தான் இருப்பார்.

ஆனால் இந்தியாவின் ஒற்றுமை தொடர்ந்து இருக்குமா?

சீக்கியர்கள் பிரச்சினை ஒருபுறம் காஷ்மீர், கூர்க்கா, தென் இந்தியாவில் தமிழர் ஆகிய பிரச்சினைகளும் உண்டு.

இவற்றைவிட மதரீதியில் ஹிந்து — முஸ்லிம்-ஹிந்து - சீக்கியர் ஆகிய வேறுபாடுகளும் எப்போது வெடிக்கும் என்ற நிலையில் உள்ளன.

இப்போது இந்த வேறுபாடுகள் எல்லாம் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. திரு ராஜீவ் காந்தியின் நேர்மைத் தனம்தான் இதற்குக் காரணம். அவரின் நல்லெண்ண அணுகுமுறை வடகிழக்கு மாநிலமான மிஸோரக் கிளர்ச்சியாளர்கள் விஷயத்தில் பலனைத் தந்துள்ளது

இந்தியாவின் 80கோடி மக்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் அந்த தனிநபர் தலைமைக்குரிய 'வரம்' திரு ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் தன்மை...அக்டோபர் 2 இல் காந்தி சமாதி முன் வெளிப்பட்டுவிட்டது

குண்டுச் சத்தங்கள் கேட்டன. அவ்வளவுதான் ராஜீவைச்சுற்றி நின்ற பாதுகாப்பு அதிகாரிகள் நாலாபுறமும் ஓடத்தொடங்கினர்.

காந்தி சமாதி முன் பிரதமர் தனித்துவிடப்பட்டார்.

பிரதமரைச் சுற்றிப் போடப்பட்ட பாதுகாப்பு வலயத்தினுள் எப்படிக் கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் கரம்ஜிட் சிங் வந்தார் என்பது பற்றிய விசாரணையைத் தொடர்ந்து 4 பாதுகாப்பு அதிகாரிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பிரதமரின் மாமனாரும் மேலதிக பொலீஸ் ஆணையாளருமான கௌதம் கௌல் என்பவரும் ஒருவர்

ராஜீவின் பாதுகாப்பின்தான் இந்தியாவின் பாதுகாப்பே தங்கியுள்ளது என்பது இதில் இருந்து தெரிகின்றது அல்லவா! ☆

# அரசாங்க அலுவலகங்களில்.... "சிகதி"

### கோட்டையில் வேண்டாம்

தபால் சந்தோர் மூலம் ஒய்வூதியம் பெறுவோரில் பலர் இடர்களை மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் இவர்கள் மீண்டும் கோட்டைக்குச் செல்வது ஒய்வூதியத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை நிர்வாக ரீதியாக ஏற்படுத்துவது நல்லது சூழ்நிலை சரியாக இல்லை என்று தெரிந்த பின்னரும் கோட்டைக்கும் போவது பற்றி சிந்திக்க எவரும் முற்படக்கூடாது.

✶ ✶ ✶

பிறர் நலனுக்காக சேவை செய்பவர்கள் பலர் சாதாரண பொதுமக்கள் முதல் அரச பதவிகள் வகிக்கும் சிலர் வரை அடங்குவார். இப்படியானவர்கள் பொது சேவையில் ஈடுபடும் பொழுது தங்கள் சொந்தப் பணத்தையும் செலவு செய்ய வேண்டும். பொதுப் பணத்தை யாரும் செலவு செய்யலாம் இதில் கண்டிப்பான கட்டுப்பாடு இல்லாவிட்டால் பொதுப் பணம் வீண் விரயமாகும். சமூக சேவையாளர்கள் இதில் சிறிது கவனம் செலுத்தவேண்டும்

✶ ✶ ✶

நிதி சம்பந்தமான கொடுப்பனவுகளில் வடிக்கைக்காரர்களுக்கு சில அரச நிதி வழங்கும் நிறுவனங்கள் இழுத்தடிக்கும் ஒழுங்கு இல்லை என்று சொல்லப்படுகிறது இதனால் பொதுவான தாரமுன்னேற்றம் தடைபடுவதுடன் அந் நிறுவனங்கள் நியாயமற்ற முறையிலும் செயற்பட மூனை கிறது எனவும் எண்ண இடமுண்டு இவர்களை இப்படி நடந்தால் பொதுமக்கள் யாரிடம் செல்வது?

✶ ✶ ✶

காப்புறுதி செய்தும் வகிசெயல்களால் பாதிக்கப்பட்ட இங்குள்ள நிறுவனங்களுக்கு நட்டஈடு வழங்க காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இணங்கவில்லை வேறு ஸ்தாபனங்களுக்கு அரச காப்புறுதி செய்யப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு இப்படி சில விடயங்களிலும் அதன் இயலாமையைக் காண்பித்து வருகிறது தென் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை கொள்ளையின் பின்னர் அங்கும் காப்புறுதியை அரசு வழங்கியதோ? யார் அறிவார்?

✶ ✶ ✶

அரசு தனது தேசிய பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்திவிட்டதாக தெரிவிக்கிறது ஆனால் தென்னிலங்கையில் கூட பெரும்பான்மை மக்கள் தொடர்ந்தும் கஷ்டத்திற்குள்ளாகிக் கொண்டு தான் இருக்கின்றனர். பொதுவாக வாழ்க்கைத்தரம் உயரவில்லை ஏற்றுமதிகள் பெருகவில்லை இதற்கு குறுகிய எண்ணமும் தேசிய பற்றின்மையுமே முக்கிய காரணங்களாகும். இதனை சகல நிலைகளிலும் பொறுப்பாளர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். அவர்களும் சுதந்திரத்துடன் செயற்பட அனுமதிக்கப்படல் வேண்டும். வடக்கு கிழக்கில் இவர் நியாயமான அடக்குமுறை. தெற்கில் இன்னொரு விதமான அடக்குமுறை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.

(நன்றி: இராஜகோபுர கும்பாபிஷேகமலர்) (1978)

# நாராயணா என்னும் நாமம்

'ஞானத்தால் நன்குணர்ந்து
நாரணன் தன் நாமங்கள்
தானத்தால் மற்று
அவன் பேர்
சாற்றினால் வானத்து
அணி அமரர்
ஆக்குவிக்கும்'

திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவம். தொன்றுதொட்டுப் பல உயர்ந்த தத்துவங்களைத் தன்னுள் அடக்கி மிளிரும் இச்சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களின் அருட்பாசுரங்களிலே திருமாலின் பன்னிரு திருப்பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன: கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமனன், சிதரன், இருதடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பனவாம்.

இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது நாராயணன் என்பது நாரம் அயனன் என்ற இரண்டு சொற்களால் ஆனது. இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர் முதலாவது, அறிவில்லாத பொருள்களின் கூட்டத்துக்கு இடமாக உடையவன் என்பது இரண்டாவது, அழிவில்லாத பொருள்களை இடமாக உடையவன் என்பதாகும். இவை முறையே வியாபகத்துவம், அந்தர்யாமித்துவம் எனப்படும். இக்கருத்தை ஆழ்வார் பாசுரம் மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது.

'அறிகிலேன் தன்னுள்
அனைத்துலகும் நிற்க'

நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்,என்பது திருவாய் மொழி நற்றினை என்ற நூலில் இயன்ற எல்லாம் பயின்று அகத்தடக்கிய வேதமுதல்வன் என்று திருமாலைக் குறிப்பிட்டுள்ளார் தன்னிடத்திருந்து உண்டான நூல்வலையில் சிலந்திப்பூச்சி குடியிருப்பது போன்று தன்னிடத்தில் இருந்து உண்டான பிரபஞ்சம் முழுவதிலும் பரமாத்மா உறைந்திருக்கிறான். எனவே அவன் நாராயணன் எனப் போற்றப்படுகின்றான். அவனுடைய வியாபகத்தை பஞ்ச பூதங்களோடு இணைத்து ஆழ்வார்கள் காட்டியுள்ளனர். பாரிடை ஐந்தாயும் நீரிடை நான்காயும் தீயிடை மூன்றாயும் காற்றிடை இரண்டாயும் ஆகாயத்திடை ஒன்றாயும் அமைந்து விளங்கும் தன்மை விளக்கப்படுகிறது.

'பூவியாய ஐந்துமாய்
புனற்கண் நின்ற
நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய்
சிறந்த காலிரண்டு -
மாய்
மீ நிலாய ஒன்றுமாய்
வேறுவேறு தன்மை-
யாய்
நீ நிலாய வண்ணம்
நின்னை யார் நினைக்க
வல்லரே''

''மந்திரம்'' என்பது நினைப்பவனைக் காப்பது இதனைப் பக்தியோடு ஜெபித்தால் மேலும் மேலும் பலனை அடையலாம் பெருமான் தனது ஒரு கையில் சங்கு வைத்திருக்கிறான் அதனை ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம். இயற்கையின் இயக்கச்சத்தமே ஓங்காரமாகும் ஓசை தான் உலகில் உள்ள அனைத்திற்கும் முதலாகின்றது. 'சொல்'' என்னும் வித்திலிருந்து பொருள் உண்டாவதுபோல் மந்திரத்தில் இருந்து வடிவம் பிறக்கிறது வைணவ சமயத்தில் வீடு பேற்றை அடைய விரும்புகின்றவன் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்று மறைமொழிகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அவற்றுள் முதலாவது திருமந்திரம் என்பதாம் 'ஓம் நமந ராயணாய'' என்ற மூன்று பதங்களில் ஓம் என்ற சொல்லின் பொருளையே ''நம நாராயணாய'' என்ற இரு சொற்களும் விளக்குகின்றன. இதுவே சகல வேதங்களின் சாரமாக இருப்பதால் அவை பயபக்தியோடு குருசீட முறையில் அணித்தாக இருந்து உபதேசிக்கப்பட வேண்டியது என்பர் அதனாலேயேமறைமொழிகள் என்று பெயர் பெற்றது. இதனை ஓயாது ஜெபிப்பதால் நாராயணனை உள்ளத்திலே காணவும் அவனை அடைந்து சரண்புகவும் முடிகிறது அவனைத் தெரியாது ஆனால் அவன் நாமத்தைத்தெரியும். தெரிந்ததை உறுதியாகப் பிடித்துக்கொண்டால் தெரியாததை அடையலாம் நாராயண மந்திரத்தின் பெருமையை திருமங்கையாழ்வார் அழகாகக் காட்டுகிறார்

''வாடினேன் வாடி
வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர்
இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி
இளையவர் தம்மோ
டவர் தரும் கலவியே
கருதி
ஓடினேன் ஓடி
உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்
பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்
கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும்
நாமம்

இம் மந்திரம் தரும் பயனை எடுத்துக் காட்டும் பாசுரமும் மிகச் சிறப்பானது. இதனை நாம் ஜெபிப்பதனால குறிப்பிட்ட பலன்கள் தப்பாமல் கிடைக்கும் என்பது உறுதி.

'குலந்தரும் செல்வம்
தந்திடும்
அடியார் படுதுயராயின
வெல்லாம்
நிலந்தரம் செய்யும்
நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில
மளிக்கும்
வலந்தரும் மற்றும்
தந்திடும்
பெற்ற தயினும் ஆயின
செய்யும்
நலந்தரும் சொல்லை
நான் கண்டுகொண்
டேன்
நாராயணா வென்னும்
நாமமே'

ஆண்டாள் பெருமாட்டியும் திருப்பாவையின் முதற்பாடலிலேயே 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று பாடியருளுகிறார். அனைத்தும் நாராயண சொரூபமாகக் காண்பவர்கள் உள்ளத்திலே அவன் பள்ளி கொள்கிறான். இதனால் அடியார்களின் காயமே கோயிலாகி விடுகிறது இத்தகைய பரிசுத்த நிலையில் வாக்குச் சுத்தம் நாம ஜெபத்தாலும் மனச்சுத்தியான நிலையாலும்ஏற்படுகிறது. இதுவே சமயநெறி காட்டும் பெருநிலை இந்தநிலை வந்தடைய 'ஓம் நாராயணாய நம' என்பதை ஓராயிரம் தரம் ஜெபித்து உய்யடைதலன்றோ பக்தர்கள் கடனாகும்.

நெடிய மாயவனே
போற்றி
நிலமளி கொழுந
போற்றி
அடியினால் உலக
மெல்லாம்
அளந்துமல்லால் அந்தப்
படியெலா முண்டு
காத்த பண்ணவ
போற்றி போற்றி
கொடிய காளிங்க நிர்த்த
குஞ்சிதபாத போற்றி.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி


GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.



பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வாரம் பயணிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணிகள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளினேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்

சவூதி அரேபியாவிற்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள் உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பஸ் இல: 764 பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு | தொடர்பு: N. பாலா திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு. |

✶ உங்கள் நன்மை கருதி இரும்பு பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ருர்ஸ் என்னும் பெயரில் வர்ணகாரவடிச் சந்தியில் அமைந்துள்ளது

✶ குவியாகன் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ருர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது


# மற்றவரது தனித்துவத்தை மறுத்தால் பிரச்சினைகள் வரும்

உலகப் புகழ்பெற்ற இலங்கைப் பத்திரிகையாளர் டாக்டர் தர்ஸி வித்தாச்சி

கொழும்பு ஒப்சேர்வர் பத்திரிகை ஆசிரியராக இவர் பணியாற்றி இருந்தார்

இவரின் பேட்டி ஒன்று கொழும்பு ஒப்சேர்வர் கடந்த 5 ஆம் திகதி இதழில் வெளியாகி இருந்தது.

அதன் தமிழாக்கமே இங்கு பிரசுரமாகின்றது பேட்டி கண்டவர்: ராஜி விஜயநாயக்க.

கேள்வி: 1958 இல் இருந்த இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆதாரித்து வருகின்றீர்கள். அரசின் உத்தேச மாகாணசபைத் திட்டம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது நெருங்கிவருகிறதா?

பதில்: ஒரு குடும்பத்தில் வாழ்க்கை நிர்ப்பந்தங்கள் ஏற்படும்போது நடவடிக்கை, நடத்தை ஆகியன சம்பந்தமான வேலிகளை அமைக்க சம்மதிக்கவேண்டும் நல்ல முறையிலான வேலிகள் நல்ல அயலவர்களை உருவாக்கும். வேலியின் எந்தப் பக்கம் ஒட்டகம் பிஇருக்கும் என்பதில் தான் எல்லாம் தங்கி உள்ளது. வேலி அமைப்பது நியாயமானதாக இருக்க வேண்டும்.

கேள்வி: இன்றுள்ள பிரச்சினைக்கான காரணம் என்ன என்று நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்கள்?

பதில்: மக்கள் ஒரே தன்மையாக இல்லாத நிலையில்தான் பிரச்சினை எழுகிறது. மற்றவரின் தனித்தன்மையை மறுக்கும்போதும் பிரச்சினை எழுகிறது.

சிறுபான்மையினரின் கலாசார தனித்தன்மையை மதித்து பாதுகாப்பது பெரும்பான்மை இனமக்களின் அடிப்படைக் கடமையாக இருக்கவேண்டும். இதை [illegible] கூறுகின்றேன்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பலர் ஐக்கிய இலங்கையை ஆதரிப்பது மகிழ்ச்சி தருகிறது. ஆனால் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கண்டிக்கின்றனர். நாம் சரியான பாதையில்தான் செல்கிறோமா? உங்கள் கருத்து என்ன?

பதில்: சரியான பாதை என்றால் என்ன? முந்திய அரசாங்கங்கள்

### ஒருவனது மொழி அவனது கலாசார வேர்களைக் காட்டும்

சேர்ந்த பலர் ஐக்கிய இலங்கை பற்றிப் பேசுவதையே நான் விரும்புகிறேன். இதைச் சொல்வதற்குரிய தகுதி எனக்கு உண்டு. காரணம் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து இருக்கிறேன். சிறுபான்மையினருக்கு பரிந்து பேசிய காரணத்துக்காக நான் எனது விருப்பத்துக்கு மாறாக குடும்பத்துடன் வெளிநாட்டில் வசித்து வந்தேன். குடும்பத்தினரின் உயிருக்கே பயமுறுத்தல் விடுக்கப்பட்டது.

செய்த தவறுகளைக் களைவதற்கு தற்போதைய அரசு பல நடவடிக்கைகளை எடுக்கிறது சிங்களம் மட்டும் சட்டம் வந்தசமயம் நான் வெளிநாட்டில் இருந்தேன். நானும் ஒரு தமிழனாக இருந்திருந்தால் இதுகுறித்து கடும் சினம் கொண்டிருப்பேன் என்று நானே எண்ணிக்கொண்டேன். தமிழர் இம்மாற்றம் குறித்து கடும் சினம் கொண்டனர். அரசு இன்று மெதுவாக சுமத்துக்கு மருந்து கட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளது. எப்படியும் வடக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

— தார்ஸி வித்தாச்சி —


ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை



யாழ். சட்டத்தரணி (அட்வகேற்)
சி. சிவாநாகராசா
அவர்கள்

| அன்னை மடியில்: | இறைவனடியில்: |
|---|---|
| 25-10-1929 | 23-09-1985 |

திதி: 12-10-1986

எங்கள் குடும்பத்தின் தீப ஒளியாய், முருகபக்தராக விளங்கிய அன்புத் தெய்வமே! திடீர் மறைவாகி ஓராண்டாகியும், உங்கள் நினைவு எங்கள் மனக்கண்ணே தோன்றி மறைகிறது. முருகன் திருவடியை அடைந்து, பேரின்பப் பெருவாழ்வு பெற்றுவிட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாமெல்லோரும் முருகப்பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், உறவினர், அன்பர்கள், நண்பர்கள்.

'திருவேரகம்',
அட்வகேற் சிவா நாகா லேன்,
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஜயதசமித் திருவிழா
# மகிமை மிக்க பெருவிழா

ஒன்று எண்களின் துவக்கம். ஒன்பது எண்களின் விரிவு. ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து நிற்கும் அன்னை பராசக்திக்கும் ஒன்பது நாட்கள் விழா எடுத்தல் சாலப் பொருத்தமே. எத்தகைய செயலையும் மனதார நினைந்து, வாயார வாழ்த்தி, மெய்யாரச் செய்ய வேண்டும்.

## தொடருவது கலை: புரளுவது அலை: நிலைகுலையா மலை: கலைமகள் அலைமகள் மலைமகள் இதனை உணர்த்துவர்

அதனைக் குறிக்குமுகமாகவே மும்மூன்று நாட்களாக ஒன்பது நாட்கள் இவ்விழாவினை அமைத்துள்ள அரியபாங்கு ஆராய்தற்குரியதே.

### இருவகை

நவராத்திரி இருவகைப் படும். அவை வேனிற் காலமாகிய சித்திரைத் திங்கள் (வசந்தருது) வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்பெறும் "வசந்த நவராத்திரி". கார்காலமாகிய புரட்டாசித்திங்கள் (சரத்ருது) வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்பெறும் "சாரதா நவராத்திரி" என இருவகைத்து.

புரட்டாசித் திங்கள் கொண்டாடப்பெறும் இத்திருவிழா நம் வாழ்க்கையுடன் ஒட்டிய மரபு விழா ஆகும். பணம், பண்பு, படிப்பு இம்மூன்றும் வாழ்வின் அடிப்படைத் தேவைகள். ஒன்று குறைந்தாலும் வாழ்க்கை நிறைவடையா. சிறப்பாக இம்மூன்றும் தெய்வத் திருவருளாலேயே எய்தப் பெறுவன. அத்திருவருளை நெஞ்சில் தேக்கி நெறிமுறையுடன் வழிபடுபவர்க்கு இம்மூன்று திருவும் அறமுறையாலே கிடைப்பது உறுதி.

### வென்றிப் பத்து

செல்வத்திருவும், ஞானத்திருவும், கலைத் திருவும் ஒருவனுச்கு ஒருங்கே வாய்த்து விட்டால் அதுவே வாழ்வின் விழுமிய நிலை... வெற்றி நிலை. இக்குறிப்புத் தோன்றவே பத்தாம் நாளை "வென்றிப்பத்து" "விஜயதசமி" எனப் போற்றுகின்றோம் இந்த அற்புத அணுகுமுறை வேறெந்த விழாவிற்கும் இல்லை.

அறிவு, ஆற்றல், அன்பு என்ற இம்மூவகைத் தெய்வ ஆற்றலை "கலைமகள்", "மலைமகள்", "அலைமகள்" எனப் போற்றிப் புளகித்தனர் நம் முன்னோர். பிறவி தோறும் ஒருவனைத் தொடர்வது கலை ஒரு பிறப்பிற்குள்ளேயே எழுந்தும் விழுந்தும் கரை சேர்வது அலை என்றும் ஒரு படித்தாய்க் குன்றாதிருப்பதுமலை. அது போல கல்வி ஒருவனுக்குப் பிறவிகள் தோறும் தொடரும் செல்வம் அவ்வவர் வினையின் பயனாக ஏறும். குறையும். மலையே கலங்கினும் நிலை கலங்காத உறுதியே மனவீரம்.

விதையிலிருந்து எப்படி முளை, கிளை: அரும்பு மலர், காய், கனி முதலியன தோன்றுமாப் போல், புவனேஸ்வரி பீஜத்திலிருந்தே மகா காளி, மகாலக்ஷ்மி, மகா சரஸ்வதி தோன்றினர்.

**பாராயணம்**

இந்நவராத்திரி காலங்களில் தேவி மஹாத்மியத்தைப் பாராயணம் செய்வது மிகச் சிறந்தது. எழுநூறு மந்திர வடிவிலே சுசப்தசதி அமைந்தது இந்நூல். பதின்மூன்று அத்தியாயங்களிலே மலர்ந்துள்ளது.

இதனைப் படிப்பவர் கேட்பவர்கள் எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டு சகல சௌபாக்கியங்களையும் அடைவர்

அபிராமி அந்தாதி சகல கலாவல்லிமாலை, மீனாட்சியம்மன் பிள்ளைத்

**வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நவராத்திரி நாயகிகள்

**நவராத்திரி சிறப்பம்சம்**

நவராத்திரிக்கு துர்க்கா பரமேசுவரியையும் மகாலக்ஷ்மியையும் சரஸ்வதி தேவியையும் பூஜிக்கிறோம். மூன்று மூர்த்திகளாகச் சொன்னாலும் முப்பத்து முக்கோடி மூர்த்திகளாகச் சொன்னாலும் அத்தனையாகவும் இருப்பது ஒரே பராசக்திதான்.

இந்த உண்மையைத்தான் லலிதா சகஸ்ர நாமம் பரதேவதையை வர்ணிக்கும்போது அவளே சிருஷ்டி செய்பவள் அவளே பரிபாலனம் செய்பவள், சம்ஹாரம் செய்பவள் என்று சொல்கிறது. லலிதையாக, துர்க்கையாக இருக்கிற பராசக்திதான் மகாலக்ஷ்மியாகவும் சரஸ்வதியாகவும் இருக்கிறாள்

ஒரே பராசக்திதான் வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டு வெவ்வேறு காரியங்களைச் செய்கின்றாள். துர்க்கையாக இருக்கின்றபோது வீரம், சக்தி எல்லாம் தருகிறது மகாலக்ஷ்மியாகி சம்பத்துக்களைத் தருகிறது. சரஸ்வதியாகி ஞானம் தருகிறது

ஆதி பராசக்தியான துர்க்கையைப் பொதுவாகப் பார்வதி என்று சொல்லலாம். அவள் ஹிமவானின் புத்திரியானதால் மலைமகள். மகாலக்ஷ்மி பாற்கடலில் தோன்றியதால் அலைமகள். சரஸ்வதி சகல கலா ஞானமுந் தருவதால் கலைமகள்

### பார்க்கவி

பர்வத ராஜபுத்திரியாக வந்த அம்பாளும், க்ஷீர சாகரத்திலிருந்து பிறந்த மகாலக்ஷ்மியும் இரண்டு மகரிஷிகளுக்கும் பெண்களாக அவதரித்திருக்கிறார்கள். மகாலக்ஷ்மியை மகளாகப் பெற்று, சீராட்டி வளர்க்க வேண்டும் என்று பிருகு மஹரிஷி தபஸ் செய்தார் அதற்கிணங்கவே லக்ஷ்மி தேவி அவருக்குப் புத்திரியாக உற்பவித்தாள் பிருகுவுக்குப் புத்திரியானதால் அவருக்குப் பார்க்கவி என்று பெயர் ஏற்பட்டது

### காத்யாயனி

இப்படியே காத்யாயன மகரிஷி சாட்சாத் பரமேசுவரியைப் பெண்ணாக அடைய வேண்டும் என்று விரும்பித் தபஸ் செய்தார். அம்பிகையும் அவருக்கு மகளாக ஆவிர்பவித்தாள் காத்யாயனருக்குப் பெண் என்பதாலேயே அவளுக்குக் காத்யாயனி என்ற பெயர் உண்டாயிற்று.

### குழந்தையாய் இரு

தெய்வத்தைக் குழந்தையாக வரச் சொன்னதில் நிரம்ப விசேஷம் இருக்கிறது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்கிறோம். தெய்வமே குழந்தையாக வந்தால் நம்மைப் போல் காமமும் குரோதமும் துக்கமும் வேருன்றி இருப்பதில்லை. இந்த நிமிடத்தில் நிரம்ப ஆசைப்பட்ட ஒரு பொருளை அடுத்த நிமிடத்தில் தூக்கிப் போட்டு விட்டுப் போகிறது.

கோபமும் இப்படியே சுவடு தெரியாமல் நிமிஷ மாத்திரத்தில் மறைந்து போகிறது. அழுகையும் இவ்வாறேதான். நாம் தான் உணர்ச்சிகளை ஆழ உள்ளே வாங்கிக் கொண்டு மனத்தைக் கெடுத்துக் கொள்கிறோம். உணர்ச்சிகள் வேருன்றாமல் குழந்தைகள்போல் நாமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இதனால்தான் உபநிஷதமும் 'குழந்தையாய் இரு' என்கிறது

சாக்ஷாத் பராசக்தி

**ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்**

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கலாவல்லி

சொல்விற் பனமும் அவ
தான முங் கல்வி
சொல்ல வல்ல
நல்லித்தையுந் தந்து
அடிமை கொள்வாய்
நளின சனம் சேர்
செல்விக்கு அரிதென்று
ஒரு காலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்
செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

* * *

நாடும் பொருட் சுவை
சொற்சுவை தோய்தர
நாற்கவியும்
பாடும் பணியிற்
பணித்தருள்வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும் பொற்
கொடியே கனதனக்
குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங்
கரும்பே
சகலகலாவல்லியே!

* * *

பாட்டும் பொருளும்
பொருளால் பொருந்தும்
பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்
கண் நல்காய் உளங்
கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்
தீம்பால் அமுதந்
தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்
ஓதிமப் பேடே
சகலகலாவல்லியே!

# வஞ்சக நெஞ்சத்துப் பறங்கியர்
# தமிழர் வெஞ்சமர் கண்டு மிரண்டனர்

போர்க்களத்தில் அங்குமிங்கும் தன் புரவி மீது ஒடியாடி வாள் சுழற்றும் கரங்களால் கவண்கல் வீச்சில் ஈடுபட்டிருந்த சங்கிலி மன்னன் தன் சேனையுடன் பறங்கிப்படைக்குள் ஊடறுத்துப் புகுந்து அவ்வந்நியரை வேரறுக்கும் சந்தர்ப்பத்தை நொடிக்கு நொடி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்... பறங்கியரின் துப்பாக்கி வேட்டுக்களையடுத்துப் பதுங்கிய நல்லூர் போர் வீரர்கள் சேனாதிபதியின் உத்தரவின் மீது சடுதியாய் முன்னே பாய்ந்து மண் மாரி மழைமாரி பொழிந்ததைப் போல் அம்புகளை எய்கின்றனர். அடுத்த அணியினர் கவண்கல் சுழற்றியடிக்கின்றனர். பறங்கியருக்கு பெரும் அதிர்ச்சியும் அந்தரமுமாகப் போய் விடுகிறது

வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற வில் வீரர்களின் அம்புகள் விர்... றென்று பறந்து சென்று வெள்ளைப் பறங்கியரின் மார்புகளைக் குத்தித் துளைக்கின்றன. இச்சாயத்தில் பறங்கிப் படைக்குள் ஊடறுத்துப் புகுந்த சங்கிலி மன்னனும் சேனை வீரர்களும் பறங்கியர் பலரை வெட்டிச் சாய்க்கின்றனர். நல்லூர்ச்சேனை தம்மை ஊடறுத்துப் புகுந்து கொண்டதும் பறங்கியரும் வாட்போரில் ஈடுபடுகின்றனர். மேகமும் மேகமும் மோதுவது போல் நல்லூர்ச்சேனையும் பறங்கிப்படையும் சமராடி நிற்கின்றன. நல்லூர் சைன்யத்தின் இசையணியினர் பேரிகை முழங்குகின்றனர்... போர் முழக்கம் ஒலிக்கிறது... துப்பாக்கி ஏந்திய பறங்கி அணி ஆத்திரம் வசரமாய் வேறாக சற்றுத் தொலைவில் ஒடி பொதுங்கி துப்பாக்கிக் குழாய்களில் வெடிமருந்து நிரப்பிக் கொள்கிறது ...

**ம. க. அ. அந்தனிசில்**

பறங்கிப் படைகளூடே வாயு வேகத்தில் வாள் சுழற்றிச் சமராடும் சங்கிலி மன்னனின் கனல் தெறிக்கும் கண்கள் பறங்கித் தளபதியை அங்குமிங்கும் தேடுகிறது... அவனோ தூரத்தே துப்பாக்கி அணியுடன் துப்பாக்கியும் கையுமாக நிற்பது கண்டு கேலியாகச் சிரிக்கிறான் மன்னன்... மீண்டும் மன்னனின் வாள் மின்னல் வேகத்தில் சுழல்கிறது... நெருங்க முடியாதிருந்த பறங்கிப் படையை நெருங்கிப் பொருதும் நல்லூர்ச்சேனை நெருப்புப் பறக்க போர் புரிகிறது.

வாள்களும் வாள்களும் மோதி தீப்பொறிகள் பறக்கின்றன... மேலே புழுதி கிளம்பித் திரை போடுகிறது...வாள்களின் உராசல் சத்தங்களுக்கும் மேலாக மன்னனது குதிரையின் அகங்காரக் கனைப்பு ஒலித்து எதிரொலிக்கிறது. தளபதி வீரமாணிக்க தேவன் பந்து போல் சுழன்றாடிப் போர் புரிந்து கொண்டிருக்கிறான்...

**சரணடைய இருந்த வேளை தரங்கம்பாடியிலிருந்து ஒரு சேனை**

### பழிக்குப்பழி

முதல் நாள் போரில் தம் வீரர்கள் பலரின் உயிரைச் சூறையாடிய குற்றத்திற்குப் பழிக்குப் பழி தீர்க்கும் முகமாகவும், அதற்கும் மேலாகத் தம் மண்ணை சூறையாட எண்ணிய துரோகச் செயலுக்குப் பாடம் புகட்டும் முகமாகவும் நல்லூர்ச் சேனை பறங்கிப் படைகளுடன் அஞ்சா நெஞ்சத்துடன் வெஞ்சமர் புரிந்து நிற்கிறது. வாழைத்தண்டுகள் போல் பறங்கியர் வெட்டிச் சாய்க்கப்படுகின்றனர்... வாட்போரில் நல்லூர்ச் சேனைக்கு நிகர் நல்லூர்ச்சேனை தான். பறங்கியருக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.. களைப்புக் கொண்டவர்கள்போல் காட்சியளிக்கிறார்கள் . .

போர்க்களத்தில் போர் நெறிதவறாமல் சமராடி நிற்கும் தமிழ் வீரர்களை ஓர் பறங்கி போர்நியதிக்கு முரணாக பின்பக்கமாகச் சென்று ஈட்டியால் புறமுதுகில் குத்துவதைத் தொழிலாகக் கொண்டு நிற்பதைக் கண்ணுற்ற துணைத்தளபதி கரைப்பிட்டி வன்னியன் ஆவேசமாய் நெருங்கி தன் குத்துவாளை விட்டெறிந்து அவனின் மார்பைப் பிளந்து எமலோகம்போக்குகின்றான். "போர்க்களத்தில் புறமுதுகு காட்டாத எம் பரம்பரைக்குப் புறமுதுகிலே விழுப்புண் ஏற்படுத்தப் பார்க்கிறான் துரோகி"—இவ்வாறு முணுமுணுத்துக் கொண்ட கரைப்பிட்டி வன்னியன் மேலும் அத்தகைய துரோகிகள் ஊடாடி நிற்கிறார்களா என்பதைக் கண்டறிய சுற்றிவந்து நோட்டம் விடுகிறான்.

அப்போது தூரத்தே நின்ற பறங்கி அணியினர் துப்பாக்கிகளுடன் மெதுவாக நெருங்கிவருவதைக் கண்டுகொண்ட கரைப்பிட்டி வன்னியன் சத்தமிட்டு 'தளபதி யாரே! குழாய்ப் பறங்கிகள் நெருங்குகிறார்கள்' என்கிறான் அது கேட்ட தளபதி மன்னன் சமராடும் திசைப் பக்கம் விரைந்துசென்று 'மன்னவா! துப்பாக்கி அணியொன்று நெருங்கிவந்து கொண்டிருக்கின்றது... அவர்கள் நமக்கு உயிர்ச்சேதம் விளைவிப்பதற்காக தம் ஆட்களையும் பொருட்படுத்தாமல் வேட்டுக்களைத் தீர்க்கக் கூடும்'' என்கிறான்.

### போர்க்களத்தில் சிரிப்பு

அப்போது வலப்பக்கம் திரும்பிப் பார்த்த மன்னன் சற்றுத் தொலைவில் துப்பாக்கி அணி நகர்ந்து வருவதைக் கண்டு "அப்படியானால்... சற்று ஒதுங்குவோம் ஒய்வோம் பின் பாய்வோம்'' என்கின்றான் சிரித்துக்கொண்டே! அது கேட்டு தளபதியும் சிரித்துக்கொள்கிறான். போர்க்களத்திலும் சிரித்து மகிழும் சிங்கத்தமிழ்க் குலமல்லவா தமிழ்க்குலம்!

தளபதி வீரமாணிக்க தேவனின் உத்தரவையடுத்து நல்லூர் சைன்யம் திடீரென ஒதுங்கி தூர விலகுகிறது. டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்... பறங்கியர் வேட்டுக்களைத் தீர்க்கின்றனர். நல்லூர் சைன்யம் தூரத்தே சென்று நிற்கிறது.

தம் ஆட்களின் பிணக் குவியலைக் கண்ட பறங்கியர் ஆத்திர மேலீட்டால் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கின்றனர். ஆனாலும் அவர்களின் வேட்டுக்கள் வீண்விரயமாகின்றன... இந்த நிலையில் ஆவேசம் கொண்ட பறங்கித் தளபதி அன்ரூ பூர்த்தாட் துப்பாக்கி அணியைமுன்னேறுமாறு உத்தரவிடுகிறான். பறங்கிப்படை முன்னேறுகிறது... பறங்கியர் முன்னேறினாலும் வெடி தீர்ந்த துப்பாக்கிகளுக்கு அவர்கள் வெடிமருந்து நிரப்பித்தானா வேண்டும்...அதன் பின் நின்ற நிலையில்குறிபார்க்கசுருட்டுக்கு நெருப்பு வைப்பது போல் அதற்கு நெருப்பு வைக்க வேண்டும்...

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (பகுதி ஏழு-ஆ)**

இவையெல்லாவற்றையும் கண்டு பழக்கப்பட்ட நல்லூர் சைன்யம் பறங்கிப்படை முன்னேறுவதையிட்டு தன்னை அலட்டிக் கொள்ளவில்லை.

துப்பாக்கி கொண்டு போரிடும் பறங்கியருடன் துப்பாக்கியில்லா நிலை கொண்டு போராடும் செந்தமிழ் வீரர்கள் எதையும் அலட்சியம் செய்து நிற்கிறார்கள். மீண்டும் வில் வீரர்கள் நெஞ்சுரம் மிக்கோராய் பறங்கியரின் துப்பாக்கி அணியை நோக்கிப் பதுங்கியவாறு முன்னேறுகிறார்கள்... இவ்வாறாக இரண்டாம் மூன்றும் நான்காம் ஐந்தாம் ஆறும் நாட்கள் போர் நிகழ்ந்து ஏழாம் நாள் முழு மூச்சுடன் பறங்கிப்படையை ஊடுருவிப் புகுந்த நல்லூர்ச்சேனை வெஞ்சமராடி வரும் வேளை...... நல்லூர்ச்சேனைக்கு வெற்றி நெருங்கிக் கொண்டிருக்கும் வேளை சங்கிலி மன்னனிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லையெனப் பறங்கித் தளபதி அன்ரூ பூர்த்தாட் எண்ணிக் கொண்டிருந்தவேளை...

பெரும் வெடி முழக்கங்களுடன், தரங்கம்பாடியிலிருந்து வந்த பறங்கிச்சேனை போர்க்களத்திற்குள் புகுந்து கொள்கிறது!

(வளரும்)

யாழ்ப்பாணத்தில்

**நினைவலை**

# இசைக்கும் நடனத்திற்கும் பல்கலைக்கழக அந்தஸ்து

## வாய்ப்புக் கிடைத்த விதம் பற்றி வீரமணிஐயர் விளக்குகின்றார்

லகுவாய், லாகவமாய், லாவண்யமாய், லயசுத்தமாய் லயித்துப் பாடவல்லவர் இயலிசை வாரிதி ந வீரமணிஐயர் அவர்கள்

சங்கீதப் பிரியர்களைத் தனது சாஹித்தியங்களாலும், கீர்த்தனைகளாலும், நாட்டியப் பாடல்களாலும் கவர்ந்திழுக்கும் வீரமணிஐயர் சாரீரத்தால் மிகவும் உயர்ந்தவர். சரீரத்தால் மிகவும் மெலிந்தவர். நர்த்தனமாடும் தமிழ் அறிவு அவரது பாடல்களுக்கு மெருகூட்டுகின்றது. சிரித்தமுகமும் நெற்றியில் துலங்கும் குங்குமப் பொட்டும் அவரது முகத்திற்கு எழிலூட்டுகின்றன.

கலைஞர்கள் பலரை ஈழத்திற்கு அளித்ததால் பெருமை காணும் இணுவிற் பெரும்பதி, வீரமணி ஐயரையும் உலகிற்குத் தந்து தனது பெருமையை பன்மடங்கு அதிகரித்துள்ளது என்பது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஓர் உண்மை.



பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களைப் புன்னாலைக்கட்டுவனில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன். அந்தப் புதிய சிறிய இல்லமே ஒரு கலைக்கோயிலாக மிளிர்கிறது. அவரது சாஹித்தியங்களில் தன்னை மறந்து தானே ஒரு சாஹித்யமாகத் திகழ்பவர் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் வீரமணிஐயர்.

**சந்திப்பு: எஸ். ஜெகதீசன்**

ராகங்களுக்குள்ளேயே கல்யாணம் பண்ணிவைச்சேன்! அந்த சமாச்சாரம் தெரியுமா?

-என்னை முந்தி கொண்டு தானே கேள்விக்கணை தொடுத்த வீரமணி ஐயர் அற்புதமான-இனிமையான பாடலொன்றை அபிநயத்துடன் பாடி முடிக்கின்றார்.

கற்பகவல்லியின் பொற்பதங்களைப் பிடித்தவர் இந்த அமைதியான அபூர்வமான கலைஞர் கலைமகளின் அருள் நிரம்பவே பெற்றவர்.

தங்களது பாடல்களில் இசைத்தட்டுக்களாகவும் நூல் வடிவங்களாகவும் வந்தவை எத்தனை?

எனது கேள்விக்குபதில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டத்தைத் தொடர்வதற்கு ஆகக்குறைந்த வேலைத்திட்டத்தை ஒன்றுபட்டுத் தயாரிக்கவேண்டும்

சென்னையில் உலகப் பல்கலைக்கழக நிலையத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு கே உமாமகேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் இவை.

27 9 1986 இல் வெளியான 'சற்றர்டே ரிவியூ' வில் இவை வெளிவந்தன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக உருவானது தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பளிப்பதே நமது எண்ணம். தாக்கிவிட்டு ஓடும் செயல்பாடுகளை நாம் விரும்பவில்லை.

கிராம மட்டத்தில் மக்களுடன் வேலைசெய்வதே எமது இலட்சியம் இராணுவ ஆட்சியையும் ... ஏற்றுக்கொள்ளமுடியாத எமது ஸ்தாபனத்தின் நோக்கம். இது அதியாவசியமானது என்று நாம் உணருகின்றோம்

ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரானதே எமது போராட்டம். எதிரியை நாம் அடையாளம்காண வேண்டும். மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.

எமது போராட்டத்தை திசை திருப்புவதில் மட்டும் எதிரி ஈடுபடவில்லை; இருபக்கங்களிலும் உள்ள வெறி உணர்வை ஒன்று திரட்டுவதிலும் தமது எதிரி முயல்கின்றான்.

அப்பாவிகளைக் கொல்வதுகூட இருதரப்பிலும் வெறி உணர்வை ஏற்படுத்துகிறது

இனவெறிச் சட்டித்தப்போதைய அரசாங்கம் இராணுவவெறி கொண்டது என்பதை நாம் ஏற்கிறோம். வெறியை வெறியால் தோற்கடிக்க முடியாது பாசிஸத்தை பாஸிசத்தினால் முறியடிக்க முடியாது

**உமாமகேஸ்வரன் சொல்கிறார்**

சிங்களவர்களும் பார்க்க நாம் கவனமாக இருக்க வேண்டும். இனவெறிச்



சட்டிக்குள் விழுந்து எரிய எமது மக்களை அனு

மதிக்க முடியாது

தென் இலங்கையில் உள்ள தொழிலாள வர்க்கத்தை நாம் ஒன்று திரட்டவேண்டும்.

வாள், வேல், அம்பு ஆகியவற்றுடன் பிறந்த வீரர்கள் தாம் என்று சில தமிழர்கள் நினைக்கின்றனர். பெரும்பான்மையினர் ஆயுதம் தூக்கினால் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில் நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள், தென் இலங்கையில் உள்ள முற்போக்குச் சக்திகள் ஆகியவற்றின் ஆதரவை நாம் பெறவேண்டும்.

இன்னொரு நாட்டின் உதவியை நாம் இரட்ட முடியாது. இதை நான் முதலில் தெட்டத்தெளிவாகக் கூறுகின்றேன்.

சிங்களத் தொழிலாளரும் ஒன்றுதிரள சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவுக்கு பாடம் புகட்ட

## வீட்டை விட்டுக் கிளம்பியவர்

## கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.

அந்தக் கிராமத்தில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தது அங்கே தமிழ் மட்டும் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். ஆங்கிலம் படிக்கவேண்டுமானால் அயலூருக்குத்தான் போகவேண்டும்.

அதே கிராமத்தில் ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். மகனுக்கு திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்துவிட்டது. இனி, ஆங்கிலமும் கற்கவேண்டும். அவர் தம்முடைய மகனை ஆங்கிலம் கற்க அயலூருக்கு அனுப்பவில்லை அந்த ஊரிலேயே மகனுக்காக ஒரு புதிய ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். அதில் மகனைப் படிக்க வைத்தார் அவனுடன் சேர்ந்து சிலரும் படித்தார்கள்.

நம்முடைய மகன் நன்ருகப் படிக்கவேண்டும். உயர்நிலை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அப்பா அப்படிச் செய்தார். ஆனல் மகனே சரியாகப் படிப்பதில்லை. பள்ளிக்கூடத்துக்கே ஒழுங்காகப் போவதில்லை ஊர்சுற்றியாக இருப்பான் அப்பா வேண்டியவர்களிடமெல்லாம் சொல்லிப்பார்த்தார் பயனில்லை!

ஒரு நாள் அப்பா கோபத்தில் அவனை நன்ருக அடித்துவிட்டார் எத்தனையோ முறை அவன் அப்பாவிடம் அடி வாங்கியிருக்கிறன் ஆனலும் அன்று விழுந்த அடிகளை அவனல் தாங்க முடியவில்லை. உடனே அவனுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. இனி இந்த வீட்டில் இருக்கப்போவதில்லை. இதோ கிளம்புகின்றேன் என்று கூறிக்கொண்டே வெளியேறினன்

தலையை மழுங்க மொட்டை அடித்துக் கொண்டான். உடுத்திய உடைகளைக் கூட உதறிவிட்டே புறப்பட்டுவிட்டான்!

ஊர் ஊராகச் சுற்றினன் கால் வலிக்க அலைந்தான் சரியான சாப்பாடில்லை நல்ல தூக்கமில்லை பாவம்! எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி இருக்க முடியும்? வயிறு காய்ந்தது உடல் இளைத்தது மனம்மாறியது உடனே வீடு திரும்பவேண்டுமென்ற ஆசை தோன்றியது. ஆனலும் நேராக வீடு செல்ல அவன் தயங்கினன் அப்பாவிற்கு கடிதம் எழுதவும் மனம் வரவில்லை யோசித்தான்.

பிறகு, தனது கிராமத்திலிருந்த நண்பன் ஒருவனுக்குத் தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் விளக்கி ஒரு கடிதம் எழுதினன் இந்தக் கடிதத்தை நண்பன் நம் அப்பாவிடம் காட்டுவான். உடனே அவர் கட்டாயம் இங்கு வருவார் வந்து அழைத்துக் கொண்டுபோவார் என்பதுதான் அவனுடைய எண்ணம் அவன் எண்ணம் வீண்போகவில்லை அதுபோலவே நடந்தது! நண்பன் மூலம் செய்தி அறிந்ததும் மகனைக் காணுமல் ஏங்கியிருந்த அப்பா ஆவலுடன் ஓடோடி வந்தார்; மகனைக் கண்டார்; கட்டித் தழுவி கண்ணீர் சொரிந்தார் அன்றே இருவரும் ஊர் திரும்பினர்.

நல்லவேளை! அந்த மகன் அப்படியே துறவியாய்ப் போயிருந்தால் அவன் பிற்காலத்தில் எப்படி ஆகியிருப்பானே? ஒருவேளை சாது சிதம்பரமாகியிருக்கலாம் அல்லது யோகி சிதம்பரமாகி இருக்கலாம்

ஆனல் தென்னட்டுத் திலகராகவோ, கப்பலோட்டியதமிழனகவோ தேசபக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளையாகவோ விளங்கியிருக்க முடியுமா?

(நன்றி: சின்னஞ்சிறு வயதினிலே)

### சாந்த வீரர்

காந்தி காந்தி காந்தி என்று
நாமும் போற்றுவோம்
காந்தி சொன்ன சாந்தி மார்க்கம்
நாளும் ஏத்துவோம்
மாந்தரிலே மாணிக்கமாய் வாழ்ந்து காட்டினர்
—சத்திய
வேந்தரென்று பாரிலுள்ளோர் போற்றி
வாழ்த்தினர்
இந்தியாவின் சுதந்திரத்தை வென் றெடுத்தவர்
இந்துமத தத்துவத்தில் நின் றுழைத்தவர்
அகிம்சை அன்புஅறவழியை சொல்லி வைத்தவர்
அரைநிர் வாணப்பக்கிரியென்று பேரெ டுத்தவர்
சத்தியாக் கிரகமென்ற சாந்தப் போரினை
புத்தியாகவே நடத்தி வெற்றி கண்டவர்
கதரிலாடை அணியவேண்டும் என்பதை
கடைசிவரை கடைப்பிடித்து வெற்றி கண்டவர்
சத்தியத்தின் சோதனைக்குள் தன்னை ஆக்கியே
சரித்திரமே படைத்துவிட்ட சாந்த வீரரே.

வ. யோகானந்தசிவம்




### கலைவாணி துதி

(நவராத்திரியை முன்னிட்டு இத்துதி இங்கு பிரசுரமாகின்றது)

அம்மா தாயே கலைவாணி
நீ என் நாவைக் காப்பாயே!
இம்மாநிலத்தின் இனிமையெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே
சும்மா இருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னல் விளங்காது
தம்மாலென்றே தடுமாறும்
தரணியை ஆண்டிட வேண்டுமடி

—பித்துக்குளி முருகதாஸ்)

# எல்லாவற்றையும் அனுசரித்து

## பொறுமை பேணுதல் பெண்ணுக்குத் தேவை

குடும்பம் என்ற பூஞ்சோலையில் இல்லாளின் கடமைகளே மிக முக்கியத்துவமான வை. அதோடு ஒரு பெண்ணிற்கு இவ்வாழ்க்கையில்தான் இன்பம் ஏற்படுகிறது. மனைவியானவள் அன்பினுலும், பாசத்தினுலும், தன் கணவன், குழந்தைகள், உறவினர்களுடன் இன்முகத்துடன் பழகிக் கொள்ளவேண்டும்.

தன் கணவன் மாலையில் தொழில் செய்து களைத்து வரும்பொழுது மனைவியானவள் சிரித்த முகத்துடன் கண்ணிற்கு குளுமையாக அலங்கரித்துக் கொண்டு வரவேற்க வேண்டும். இதை விட்டு பல பிரச்சினைகளை எண்ணி கவலைப்பட்டுக்கொண்டு முகத்தை உம் என்று சிடுமுஞ்சி போல் வைத்துக்கொண்டு இருக்காமல் சிரித்த முகத்துடன் இருக்கவேண்டும் அப்பொழுதான் வேலைத்தலத்தில் ஏதும் பிரச்சனை நடந்தாலும் விட்டிற்கு வந்தவுடன் மனைவியின் அன்பினுலும், உபசரிப்பினுலும், அவனது கவலைகள் எங்கு போகிறதோ என்று தெரியாது. அந்த நேரத்தில்தான் மனைவியின் அன்பு இன்னும் அவனுள்ளே ஊடுருவிச் செல்கிறது


கரடுமுரடான காட்டை அழித்து திருத்தி, நிலத்தை பண்படுத்தி தோட்டம் அமைப்பது போல்தான் மனிதனது வாழ்க்கையும், அவனது வாழ்வில் இலாப நஷ்டம், இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு அவனது நலனைக்கருதி நாம் ஈடுபட்டால் அதில் ஒரு இன்பத்தை காணலாம். அதோடு ஆடம்பர வாழ்வுதான் வாழவேண்டும் என்று எண்ணுமல் கணவனது வருவாய்க்கு ஏற்றவகையில் மிகவும் சிக்கனமாக செலவு செய்பவளே நல்ல துணைவியாகிறள். கணவனே கண் கண்ட தெய்வம். என்ன பிரச்சினை என்ருலும் இருவரும் ஒன்று சேர்ந்தே முடிவு எடுக்க வேண்டும். கணவனது சுகதுக்கங்களில் மனைவியும் பங்குகொள்ளவேண்டும்.

### ● ஷாமினி சிவப்பிரகாசம் ●

கஷ்ட நஷ்டங்களில் கலந்தாலோசித்து பிரச்சினைகளை சமாளித்துவர வேண்டும். அதனல் தான் பெண்ணிற்கு பொறுமை முக்கியம். மனைவியானவள் எல்லாவற்றையும் அனுசரித்து பொறுமையோடு போக வேண்டும்.

இப்படியான மனைவி கிடைத்த கணவர் இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாக நினைக்கவேண்டும்.

வாழ்க்கைப் பயணம் தான் எல்லாப் பயணத்தையும்விட கஷ்டமானது. இப்பயணத்திற்கு பக்கபலமாக இருப்பவள் மனைவியே அதனுல்தான் "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்று கவிஞர் பாடியுள்ளார்.




# இல்லாள் சிரித்தால் இல்லம் சிறக்கும்

— க. கமலாம்பிகை —

பெண்களே! நிதானமாகச் செயற்படுங்கள். பொது இடங்களில், நண்பிகளுடன் உங்களுக்குத் தெரிந்தவர்களுடன் பேசும்போது, பழகும் போது எண்ணியெண்ணிப் பேசுங்கள். பழகுங்கள். நன்ருகக் கதைக்க விரும்புகிறீர்களா? உங்கள் நண்பிகளுடன் உங்களில் அன்பு வைத்திருப்பவர்களிடம் பெரியோர்களுடன், சகோதரருடன் அலுவலக ஓய்வு நேரங்களில், வீட்டில் தாராளமாகவே கதையுங்கள்

நல்ல பிள்ளையாகத் தம்மைக் காண்பித்து, கதை கறப்பவர்களை இனம் காணுங்கள். அவர்களுடன் அதிகம் பழகாதீர்கள். அதற்காக அவர்களை வெறுக்காதீர்கள். எல்லோரையும் அன்பாக நடத்துங்கள் புத்திசாலிப் பிள்ளைகளை அளவுக்கதிகமாகச் செல்லம் கொடுத்து ஒன்றுக்கும் உதவாக்கரை ஆக்கிவிடாதீர்கள். எந்நேரமும் உங்கள் பிள்ளைகளை மிகவும் உயர்வாக அவர்கள் முன்னல் கதைக்காதீர்கள். அவர்கள் வழி தவறுவதற்கு அதுவும் ஒரு காரணமாகலாம்.

பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி அடிக்க வேண்டிய நேரத்தில் அடித்து நேர்வழி காட்டுங்கள் பிள்ளைகள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வருவது உங்கள் திறமையினலேயே.

உங்கள் அயல் வீட்டுக்காரருடன் அன்பாகப் பழகுங்கள். அவர்களை மதிப்போடு நடத்துங்கள். அவர்களைப் பற்றிய தரக்குறைவான செய்திகளை வருவோர் போவோரிடம் பரப்பாதீர்கள்

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு உறவாடுங்கள். ஏழைகட்கு உதவி கேட்பவர்கட்கு உங்களால் முடிந்த வரையில் நன்ருக உதவி புரியுங்கள். காலை மாலை வேளைகளில் கட்டாயம் இறைவனுடன் கதையுங்கள். (தியானியுங்கள்) உங்கள் பிள்ளைகளையும் இறைபக்தி மிக்கவர்களாக்குங்கள். விலைமதிக்க முடியாத நேரத்தையும் உயர்ந்த மானிடப் பிறப்பையும் பயனுள்ளதாக்குங்கள்

நினைவில் வைத்திருங்கள்; இறைவன் எங்களை இவ்வுலகில் படைத்தது. சேவை செய்யவும் பயன்மிக்க சாதனைகளைச் செய்யவுமேயாகும். எனவே நல்லவற்றைச் செய்து ஏனையோரின் மனதில் மதிப்பான இடத்தைப் பெறுங்கள் ★

### புற்றுநோய் வராமல் இருக்க

பறவைகளைப் போல தானியங்களை உட்கொண்டால் புற்றுநோய் வராமல் இருக்க வாய்ப்புண்டு எனக் கூறப்படுகிறது. ஆகியவற்றில் புற்றுநோய் வராமலும், அப்படி இருந்தால் பரவாமலும் விதையுடைய உணவுப் பொருட்களுக்கு தடுக்கும் சக்தி இருக்கக் கூடும் என எலிகளை வைத்து நடத்தியுள்ள ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது.

சளிப்பிடிக்காமல் இருக்கவும், புற்றுநோய்க்குப் பாதுகாப்பாகவும் வைட்டமின் "சி" விளங்குகின்றதென வேறொரு அறிவியல் குறிப்பு கூறுகின்றது.




# பிரபுவுடன் ஜோடியாக சேர்ந்து நடித்தது ஓர் இனிய அனுபவம்

## என்கிருர் சுதாசந்திரன்



நடிகை சுதாசந்திரன் இப்பொழுது "தாயே நீயே துணை" "தங்ககலசம்", சின்னத்தம்பி பெரிய தம்பி" போன்ற இன்னும் சில படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர்.

சுதாசந்திரன் சொல்கிருர்.

"நம்பினேர் கெடுவதில்லை" படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்தேன். பெரிய இடத்துப் பிள்ளை என்ற எண்ணம் சிறிதும் அவரிடம் இல்லை.

படப்பிடிப்பில் பிரபு கலந்து கொள்ளும் போது கலகலப்புக்கு குறைவே இருப்பதில்லை படப்பிடிப்புக்குச் அதிக தூரம் செல்லும் வேளையில், சற்று சோர்வு ஏற்படும்போது எல்லாம் ஏதாவது "ஜோக்" அடிப்பார். உடனே எல்லோருக்கும் புதிய உற்சாகமும் புத்துணர்வும் ஏற்பட்டு விடும்.

அவருடன் ஜோடி சேர்ந்து நடித்தது "ஓர் இனிய அனுபவம்" என்கிருர்

### நீண்ட நாள் ஆசை

தமிழக முதலமைச்சர் எம் ஜி. ஆரைச் சந்திக்க வேண்டும் என்பது சுதாவின் நீண்ட நாள் ஆசையாம்.

"அவர் வாழ்கின்ற காலத்தில் நாங்கள் வாழ்வதே பெருமை. அவரைச் சந்தித்து ஒரு பத்து நிமிடமாவது பேசி விட வேண்டும் என்பதே என் ஆசை" என்கிருர் சுதா.

# 'மக்களின் வாழ்வினையொட்டியே எனது படங்கள் அமைந்திருக்கின்றன'

### கூறுபவர் பாலச்சந்திரமேனன்

பாலச்சந்திரமேனன் இயக்கிய "தாய்க்கு ஒரு தாலாட்டு" படம் அண்மையில் வெளியாகி இருக்கிறது.

இவர் கேரள படவுலகில் நடித்துக் கொண்டு கதை, திரைக்கதை, இயக்கம் என்று பல சாதனைகளைப் படைத்தவர்.

அவர் கூறுகிருர்:-

"கண்ணுல் பார்க்க வேண்டும். காதால் கேட்கவேண்டும். நான்கு சுவர்களுக்குள் அடைந்து கிடந்தால் எதுவுமே தெரியாது.

நான் காலையிலிருந்து இரவு பத்து மணி வரை பல இடங்களுக்குச் செல்கிறேன். போகின்ற இடங்களில் எல்லாம் கேள்விப்படுகின்ற நிகழ்ச்சிகள், பார்க்கின்ற கேரக்டர்கள், அவர்களின் மானரிஸங்கள் — இவைகளைக் கூர்ந்து கவனித்து மனத்தில் போட்டு வைப்பேன்.

அவைகளே என் கதைகளுக்கு கருவாகவும் கேரக்டர்களாகவும் மாறி விடுகின்றன.

பொதுவாக என் படங்கள் மக்களின் வாழ்வினையொட்டி இயல்பாக அமைந்திருப்பதற்கு இதுவே காரணம்.

என் படத்தின் மூலம் ஏதாவது நல்ல செய்தி மக்களுக்கு போக வேண்டும் என்பதையே என் கடமையாக நினைக்கிறேன்.

இப்படிக் கூறுகிருர் அவர்.

### "அரங்கேற்றம்" மலையாளத்தில்

"அரங்கேற்றம்" படம் இப்போது மலையாளத்தில் தயாராகிறது

தமிழ் 'அரங்கேற்றம்' படத்தில் நடித்த பிரமிளா மலையாளத்திலும் நடிக்கிருர். ஆனல் கதாநாயகியாக அல்ல. விபசார விடுதியை நடத்தி வரும் தலைவி பாத்திரத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடிக்கிருர் பிரமிளா.

### பூஜையன்று படப்பிடிப்பு

தமிழ்ப் படங்களின் பூஜையன்று பாடல் பதிவு தான் நடப்பது வழக்கம்.

ஆனல் "உள்ளத்தில் நல்ல உள்ளம்" படப் பூஜையன்று படப்பிடிப்பு நடந்தது.

# 'அற்புதமான சினிமா'

'அற்புதமான சினிமா'- என்ற தலைப்பில் சினிமாத்துறை பற்றி இந்தியாவில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது 'பிலிம்பயா' முன்னுள் ஆசிரியரும் 'ஸ்கிரீன்' பத்திரிகையின் இன்றைய ஆசிரியருமான பி. கே. கரஞ்சியா இப்புத்தகத்தை எழுதியிருக்கிருர்.

உலகிலே அதிக கூடிய படங்களைத் தயாரிக்கும் நாடு இந்தியா. ஆனல் உலகிலே குறைந்த தியேட்டர்களைக் கொண்ட நாடும் இந்தியாதான்— இப்படி அந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் விலை 120 ரூபா, இந்தியப் பணத்தில். இலங்கைப் பணத்தில் 300 ரூபா வரையில் வரும்.

# அமிதாப் குளிப்பது

## தண்ணீரிலா அல்லது...!

'சாஹென்ஷா' இந்திப் படத்தில் நடிப்பதற்காக நடிகர் அமிதாப் பச்சன் டில்லியில் பல ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்தார்.

ஒரு நாள் அவரின் ஹோட்டல் அறைக்கு பெட்டி பெட்டியாக' மினரல் சோடா அடைக்கப்பட்ட போத்தல்கள் வந்து இறங்கின.

நடிகரின் தாகம் தீர்க்க வந்த சோடாப் போத்தல்கள் என்று ஹோட்டல் பணியாளர்கள் எண்ணினர்.

குளியலறைக்குள் தான் எல்லாப் போத்தல்களும் கொண்டு போகப்பட்டன என்பதை பணியாளர்கள் எட்டிப்பார்த்து இருந்தால் கண்டிருப்பர்.

சுத்திகரிக்கப்பட்ட சோடா நீரில் தான் அமிதாப்பச்சன் குளிப்பது என்பது இப்போது தான் எல்லோருக்கும் புரிந்தது.

சாதாரண நீரில் அமிதாப்பச்சன் குளிப்பது கிடையாது

### ● தயாரிப்பு: பேரின்பம் ●

# ஸ்ரீதேவியின் தங்கை

## ஸ்ரீலதா நடிகையாவாரா?

ஸ்ரீதேவி தமிழ் படவுலகில் "பிஸி"யாக இருந்தபோது படப்பிடிப்புகளுக்கு அவரது தங்கை ஸ்ரீலதாவை அழைத்து



வருவதில்லை. ஆனல் பம்பாய் படப்பிடிப்புகளுக்குப் போகும் போது ஸ்ரீலதாவையும் அழைத்தே போகிருர்.

அதுவும் சாதாரணமாக அல்ல அவரைப் போலவே மிக அழகாக "மேக்கப்" போட்டே அழைத்துச் செல்கிருர். இப்பொழுது அந்தப் பழக்கம் சென்னை படப்பிடிப்புகளிலும் தொடர்கிறது. இதனுல் தமிழ்ப் படவுலக வட்டாரங்களில் பலவாருகப் பேசப்படுகிறது.

"தங்கை ஸ்ரீலதாவை நடிகையாக்கும் முயற்சி தான் இது" என்றும் கூடப் பேசப்படுகிறது.

ஆனல் இதை ஸ்ரீதேவியோ முற்ருக மறுக்கிருர்.

"பம்பாய் படப்பிடிப்புகளுக்கு "மேக்கப்"இன்றி எந்தப் பெண்ணும் வருவதில்லை. அங்கே பழகிய பழக்கம் தான் இது. இதில் வேறு ரகசியம் ஒன்றும் இல்லை." என்று கூறுகிருர் ஸ்ரீதேவி.

# காந்திஜி கதை; மீண்டும் ஒரு படம்

இந்திய தொலைக்காட்சி தூரதர்ஷனுக்காக காந்திஜி படம் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

அனுபவம் ஹெர் என்பவர் [illegible] காந்திஜி யாக நடித்திருக்கிருர். அட்டன்பரோ தயாரித்த 'காந்தி' படத்தில் காந்திஜியாக நடித்தவர் பென் கிங்ஸ்லி. அவர் பிரிட்டிஷ் நடிகர்.

அனுபம் ஹெர் காந்தியாக நடித்து இருப்பது கிங்ஸ்லியிலும் பார்க்க வித்தியாசமானதாக அமைந்துள்ளதாம். சிலகட்டங்கள் புது விதமாகவும் உள்ளன.

சர்தார் பட்டேலாக மனேகர்சிங் நடித்திருக்கிருர்.

படத்தைத் தயாரித்திருப்பவர் நிஸார் அல்லானு. இயக்குநர் அமரர் அல்லானு.

### திரை உலகில்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு குன்னக்குடி வைத்தியநாதன் "தாயே அகிலாண்டேசுவரி" படத்திற்கு இசையமைக்கிருர்.

★

'கணவன் ரெடி' படத்தில் பாண்டியன் வித்தியாசமான வேடம் தாங்கி நடிக்கிருர். இப்படம் இவருக்கு ஒரு திருப்பு முனையாக அமையுமாம்.

★

நளினியும் ராதாவும் பேட்டி அளிக்கவும் புகைப்படம் எடுக்கவும் முகம் சுளிக்காமல் ஒத்துழைப்பார்களாம்.

★

சிவாஜி கணேசனுடன் முக்கிய வேடம் ஒன்றில் ஒரு படத்திலாவது இணைந்து நடிக்கவேண்டும் என்று ராஜேஸுக்கு ஆசை. அது 'மண்ணுக்குள் வைரம்' படத்தில் நிறைவேறி உள்ளது.

★

கவர்ச்சி நடிகை பொன்னிக்கு எதிர்பார்த்த படவாய்ப்புகள் கிடைக்காமல் போகவே தன்னுடன் சில படங்களில் இணைந்து நடனமாடிய நடிகர் ஒருவரை மணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையில் இறங்கிவிட்டார்.

★

'பாவம் கொடூரன்' படத்தை இயக்கித் ராஜசேனனின் புதிய படத்தில் திறமையாக நடியதிருக்கிருராம் குயிலி.

### ரசிகர் மன்றம்

நடிகர் பாக்கியராஜ் பெயரில் 15,200 கிளைகள் பாக்கியராஜ் ரசிகர் மன்றத்துக்கு உண்டு.

சுமார் 5 லட்சம் உறுப்பினர்கள் இக் கிளைகளில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

செந்தமிழ் என்றும் பைந்தமிழ் என்றும் முத்தமிழ் என்றும் புகழ் பெற்ற தமிழ் மொழியிலே இசைத்தமிழ் ஒன்று. பண்ணும் பரதமும் தமிழர் வாழ்வை மலர்த்தியவை. இசையின் அருமையறிந்தவர்கள் பல்வேறு வாத்தியங்களின் ஒலியமைவையும் பழகியிருந்தவர்கள். நரம்புக் கருவிகள் என்னும் வாத்திய வரிசையில் பலவித யாழ்கள் தமிழர் கையில் தவழ்ந்தன. அக்காலம் போய கல வீணை வந்து விளையாடியது. வீணையிற் பார்க்க ஓரளவு சுலபமான வாத்தியம் எனக் கருதப் பெற்ற வயலின் தமிழரிடையே புகுந்த காலத்தில் அதனை நன்கு பயின்று பெருமதிப்புப் பெற்றிருந்த அந்தணர் பரமேஸ்வர ஐயர் என்பவர். ஆஜானுபாகுவான அழகிய அந்தணர் அருமையான இசையாசிரியர் எனக் கணித்த இராசரத்தினம் அவர்கள், அவரை அழைத்து வந்து சைவாசிரியர் கலாசாலையிலே சங்கீதப் பேராசிரியராக நியமித்தார்.

### சைவப் பெரியார்

அந்தக் காலத்தில் சைவப் பெரியார் என்றும் பீ. ஏ. மாஸ்ரர் என்றும், புலோலிப் பெரியார் என்றும் பெரும் புகழ் பெற்றிருந்தவர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள். புலோலியில் பெரும்புகழ் பெற்ற படித்த குடும்பத்தில் பாருத்தைப் பாட்டியின் மருமகன் அவர். தமிழ் நாட்டுச் சைவாதீனங்களில் மதிப்பும் மரியாதையும் பெற்ற அவர் பரமேஸ்வராக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய சைவப் பெருங் கல்லூரிகளை வளர்த்தவர். படிப்பித்தலின் நுட்பங்களையும் விதிமுறைகளையும் நன்கறிந்த அவர் அகநூல், படிப்பித்தல் விதிமுறைகள் முதலான நூல்களையும் எழுதியவர். கல்விப் பணிப்பாளர் எச். எஸ். பெரேரா, கல்வி மந்திரியார் கனம் கன்னங்கரா முதலானவர்களின் அபிமானத்துக்குரியவர். அவர் சைவாசிரியகலாசாலையிலே வேதனம் எதுவும் பெறாமல் கௌரவமான முறையிற் சைவம் கற்பித்தவர்.

## சைவ மறுமலர்ச்சிக்கு தலைசிறந்த வழி சைவ ஆசிரியர்களை உருவாக்கலே.

### விஞ்ஞானம்

நீராவியடியைச் சேர்ந்த கந்தவனம் ஐயாத்துரை அவர்கள் சட்டத்தரணியாயும், நொத்தாரிசுவாகவும் தொழில்புரிந்தவர் அவர் தமது நொத்தாரிசு வேலைக்கு உதவியாகப் பாலபண்டித பரீட்சையிலும் சித்தி பெற்றவர். இவற்றுக்கெல்லாம் முன்னர், அவர் இளமையில் கொழும்பில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பயிற்சி பெற்று, யாழ்ப்பாணத்து இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராய் இருந்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்களும் இளமையில் இத்தகைய பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியராகி செனபற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராயிருந்தவர் கந்தவனம் ஐயாத்துரை அவர்கள் சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் தனாதிகாரியாய் இருந்தும், சைவாசிரியகலாசாலையில் பகுதிநேர விஞ்ஞான ஆசிரியராயும் இருந்து பணிசெய்தவர்.

இவ்வாறாக எல்லா வழிகளாலும் நல்லமுறையில் இனிது நடைபெற்று வந்த சைவாசிரிய கலாசாலைக்கு வேண்டிய கட்டட வேலைகளும் விரைவாக நடைபெற்று வந்த வேளையில் திருநெல்வேலியார் சிங்கப்பூர், மலேயா முதலிய இடங்களிலிருந்து பணஞ் சேர்த்து உதவினர்கள். சைவ மறுமலர்ச்சிக்குச் சைவாசிரியர்களை உருவாக்குதலே தலை சிறந்த வழியாகும் என்பதனை விளக்கிச் சைவவித்தியா விருத்திச்சங்கத்தார் மேலும் வேண்டுகோள் விடுத்தனர்.

(வளரும்)

★ க. சி. குலரத்தினம் ★

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## வட இந்தியாவை விஞ்சி நிற்கின்றது தென் இந்தியா

ஏப்ரல் 10, 1932

கீழ்க் கோடியின் சீனாவிலும் மேற்கே ரோமிலும் நீண்டகாலம் சுற்றிவிட்டு நாம் மீண்டும் இந்தியாவுக்கு வருகிறோம்.

அசோகனுக்குப் பிறகு மௌரிய சாம்ராஜ்யம் நெடுநாள் நீடிக்கவில்லை, சில ஆண்டுகளுக்குள்ளாகவே அது வலுகுன்றித் தேய்ந்துவிட்டது வடமாகாணங்கள் பிரிந்து போய்விட்டன. தெற்கே ஒரு புதிய வல்லரசு ஆந்திரவல்லரசு தோன்றியது ஐம்பது ஆண்டுகள் வரையில் அசோகன் சந்ததியார் தேய்ந்துவரும் தங்கள் சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். கடைசியில் அவர்களுடைய சேனைத் தலைவனாகிய புஷ்யமித்திரன் Pushayamitra) என்னும் ன்னாகரயணபிலர பமாதமாக அவர்களுடைய அரசைக் கவர்ந்து தன்னையே அரசனாக்கிக் கொண்டான் இவன் காலத்தில் பிராமண மதம் மீண்டும் தலையெடுத்தது பௌத்த சன்யாசிகள் ஓரளவுக்குத் துன்புறுத்தப்பட்டனர். இயநீந்தி சரித்திரத்தைக் கூர்ந்து கவனித்தால், பிராமண மதம் பௌத்த மதத்தை எதிர்த்துத் தாக்கிய முறை மிகவும் நுட்பமானதென்று கண்டு கொள்வாய். துன்புறுத்தல் முதலிய அநாகரிக முறைகளை அது மேற்கொள்ளவில்லை. ஓரளவுக்குப் பௌத்த மதத்தினர் துன்புறுத்தப்பட்டனர் என்பது உண்மையே. ஆனால் அவை அரசியல் காரணம் பற்றியவையே ஒழிய மத சம்பந்தமானவை அல்ல.

### பகுதி-15

பௌத்த சங்கங்கள் மிகப் பெரியவைகளாகவும் வல்லமை பொருந்தியவைகளாகவும் விளங்கின.

அரசியலில் அவைகளுக்கிருந்த செல்வாக்கைக் கண்டு பல மன்னர்கள் அஞ்சினர்கள். ஆகவே அவர்கள் அவற்றின் பலத்தைக் குறைக்க முயற்சிசெய்து வந்தார்கள் பிராமண மதமானது பௌத்த மதத்திற்குத் தன் வீட்டிலேயே ஓர் இடம் ஏற்படுத்திக் கொடுத்தது;

(6ம் பக்கம் பார்க்க)

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

---

## தினமும் வாழைப்பழம் சாப்பிடுகிறீர்களா?

வாழைப்பழத்தில் அப்படி என்ன இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா? வாழைப்பழம் 20 திராட்சைப் பழங்களுக்கும், 4 பேரீச்சம் பழங்களுக்கும், 2 தோடம் பழங்களுக்கும் சமம்

அத்துடன் வாழைப் பழத்தில் விற்றமின்கள் ஏ, பி, சி, டி, இ ஆகியவையும், புரோட்டீன், கொழுப்பு, மாச்சத்து ஆகியவையும் அடங்கியுள்ளன

எனவே அன்றாடம் அவசியம் ஒரு வாழைப் பழமாகுதல் சாப்பிட்டு ஆரோக்கியத்துடன் வாழலாம். எவரும் எளிதில் வாங்கக் கூடியதும் வாழைப்பழம் ஒன்று தான்.

## கண்ணதாசனின் புனைபெயர்கள்

—அமரர் கவியரசு கண்ணதாசனுக்கிருந்த புனைபெயர்கள் எவை யென்று தெரியுமா?

காரைமுத்துப்புலவர்
வணங்காமுடி
கமப்பிரிய
துப்பாக்கி

போன்ற பல பெயர்கள் அவரது புனைபெயர்களாக இருந்தன ஆனால் அவரின் நிஜமான பெயர் என்ன தெரியுமா? முத்தையா என்பதுதான்

## முன்னுது மின்னுது புத்தொளியே!

பாடுங்கள் புலவர்களே! எனப் பரவிய
பாரிய தலையங்கம் பார்த்தோமே!
படித்திடும் கவிதையில் புத்தொளி பிறக்கட்டும்
பாங்கையும் பாட்டினில் பார்த்தோமே!

கூடிய கவிதையைக் கூர்ந்தே கணித்துக்
கொடுத்திடும் என்கவிக் கொள்கையிதம்
கூடுமோ வறியேன், கொள்பவர் செம்மைக்
குறிப்புகள் அறிவதும் கூர்குணமே!

இத்தரை மீதினில் எங்கும் எரிதணல்
எறியனல் பெருங்கனல் எரிநீறு
அத்தனை அழிவுகள் சிதைவுகள் அதன்மேல்
ஆர வாரமோ அதிமோசம்

நீறுகள் பூத்தமுன் நெருப்பினில் நின்றே
நியாயங்கள் நிறுது நினைத்தபடி
ஆறுதல் தரவல்ல ஆளுமை அழகில்லை
அவசர காலமோ அதிவேகம்

திரும்பவும் திரும்பவும் பேச்சுக்கள் வார்த்தைகள்
திருத்தங்கள் வருவதன் முன்னடி
குருத்துகள் மடிவொடு குடிகளும் அழிந்திடும்
குண்டுகள் குமிந்திடும் கொடுமையதால்

பெருத்திடப் பெருத்திடப் பிறபடை விரிப்பொடு
பின்பொரு சரித்திரம் பிறந்திடுமோ?
கருத்தொடு கவனிப்பின் காரிய சித்திகள்
கைகூடும், யாரிதைக் கவனிப்பார்

பெண்களைக் கண்களைப் பெருமையைப் பாடிய
பேரமை இலக்கியப் பேறுகளும்
மண்விழை சுதந்திர மார்க்கமென் விதிக்கிதம்
மனமதிற் கொள்ளுதல் மாட்சியதே!

கண்விழை கவிதைகள் காவியம் ஓவியம்
கனிவுறச் செய்திடும் கருத்துநிறை
அண்ணல்கள் வாருங்கள் அவனியைப் பாருங்கள்
அசதியை நீக்குங்கள் அவசியமே!

இடியென்ன மழையென்ன இடுக்கண்கள்
நமக்கென்ன
எழுதிடும் பேனு வலிமையின்மேல்
படிதனிக் பாரிய பாணங்கள் பாயுது
பாரதப் போர்முறைப் பாணியிலே!

விடுதலைக் கொடிதனில் வீரியம் விழிக்குது
விடியலை நோக்கியே விரிகிறது
முடிதலைக் கேறிய முன்னவர் முறைதனை
முன்னுது மின்னுது புத்தொளியே!

—கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

# அயர்ச்சி, சோர்வு ஆகியன வீடியோ தரும் கேடுகள்

(முந்திய தொடர்)

பெரும்பாலான இயக்குநர்கள் முகப்புண் (Facial dermatitis) நோய்க்கு உட்படுவதாகத் தெரியவந்துள்ளது. முகத்தில் எரிச்சல், புண் போன்றவையே இந்நோயால் உண்டாகக் கூடியவை. நோர்வே நாட்டின் தேசிய தொழிலாளர்கள் பரிசோதிப்பு நிலைய இயக்குநர் டாக்டர் லோறன்ஸ் டிஜான் என்பவரிடம் இருந்தே இந்நோய் பற்றிய விவரங்கள் தெரியவந்தன மேலும் இந்நோய் தாடை, வாயின் கீழ்ப்புறம் போன்ற இடங்களில் லேசாக செந்நிற விக்கமாகத் தோன்றி முகம் முழுவதும் பரவத் துவங்குகிறது.

இந்நோய் அறையின் ஈரப்பதத்திற்கும், நிலமின் சாரத்திற்கும் தொடர்பு கொண்டதாகவே கருதப்படுகிறது.

உடலின் இன்றியமையாத உறுப்புகளில் ஒன்றான கண்ணுக்கு இடையூறு விளைவிக்கும் அனைத்தும் அயர்வை உண்டு பண்ணுகின்றன. வீடியோவில் பணிபுரியும் ஒருவர் கண் பெறும் அயர்வானது ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் ஒருவரின் கண் அயர்வுக்குச் சமன் ஆகும். இத்துறையில் பணிபுரியும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இக்குறைபாட்டிற்கு உட்படுகின்றனர்.

இவ்வயர்ச்சியானது பல்வேறு நிலைகளில் உணரப்படுகிறது அவற்றுள் 1) அகுலர் (Ocular) 2) விசுவல் (V!sual) 3) சமாடிக் (Somatic) 4) பிறேவிரல் (Beravia--ural) போன்ற பல்வேறு அறிகுறிகளுடன் அயர்ச்சி நிலைகள் கண்டுணரப்படுகின்றன. சரியான ஒளிடிவப்பான்களைப் பயன்படுத்திப் பணிபுரிவதன் மூலம் இத

### பகுதி- II

லைக் களையலாம்.

கண் அயர்ச்சிக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் திரையில் பிம்பங்கள் தெளிவின்மை' ஒளி அளவு கட்டுப்பாடு, சுற்றுப்புறச் சுவர்களின் பிரதிபலிப்பு போன்ற முக்கிய காரணிகளே அயர்ச்சிக்கு மூல காரணங்களாகும்.

தொகுப்பு: க. கனகராசா

ஒருவருக்கு நாம் அமர்ந்து பணிபுரியும் இருக்கை பொருந்தாத நிலையில் அவருக்கு ஏற்படும் குறையான இருக்கை நிலைச்சோர்வு ஏற்படுகின்றதும் ஆய்வின் மூலம் தெரிந்தது.

இருக்கையில் அமர்ந்து நீண்ட நேரம் பணிபுரியும்போது சில மணி நேரங்களுக்கு ஒருமுறை நாம் உடலில் உள்ள தசை அமைப்புக்களுக்கு உடலின் பளுவை மாற்றிக் கொடுக்கின்றோம். இவ்வாறு செய்வதனால் சோர்வு பெருமளவு குறைக்கப்படுகின்றது. இதற்கான காரணங்கள் மிக எளிதாகக் காணப் பட்டாலும் பின் விளைவு பெரிதாகவே விரிவடைகின்றது இருக்கை பொருந்தாத நிலையில் பணிபுரியும் ஒருவருக்கு மிக விரைவில் சோர்வு ஏற்படுகின்றது. இதனால் வீடியோவில் பட்டியல் சோர்வுத்திறன் குறைகின்றது. மேலும் பல்வேறு கணிப்பான் மையங்களில் சோர்வுத்திறனை அடிப்படையாகக் கொண்ட ஊதியம் நிர்ணயிக்கப்படுவதால் பணியாளரின் அன்றாட ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு பணியாளரின் அன்றாட வருமானம் பெருமளவு பாதிக்கப்படுகின்றது. எனவே, பணியாளர்கள் இறுக்கமான பணி நேரங்களில் இடைவேளை நேரங்களை ஏற்படுத்திக் கொண்டு சிந்தனையை மாறுபட்ட நிலைக்குக் கொண்டு வந்து தாமே புத்துணர்வைப் பெறலாம். இதனால் கண் அயர்வு உடலின் பளு மாற்றம் பெற்று பணியாளர் மேலும் நீண்ட நேரம் தொடர்ந்து பணி புரிய ஊக்கம் பெறலாம்.

வீடியோவில் பணி புரிய கீழ்க்கண்ட வரையறைகள் இருக்கைகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன நிலமட்டத்திலிருந்து கண்ணின் உயரம் சுமார் 1.0லிருந்து 1 15 மீட்டர் வரை. பார்வை தூரம் 0.45 லிருந்து 0.50 மீ வரை (மிகை அளவு 07) திரை. பார்வைக் கோணத்திலிருந்து செங்குத்தாக அமைதல் வேண்டும். சாவிப்பலகை நில மட்டத்திலிருந்து 0.72 - 0.75 மீ வரை. உயரம் வேறுபடுத்தப் படக் கூடிய சாய்வு இருக்கை. முட்டிக்கும் சாவிப் பலகைக்கும் கணிசமான இடைவெளி. கால்வைப்புப் பலகை 45 பாகை கோணத்தில் (தேவைப்பட்டால்)

மேற்கூறிய வரையறைகளுக்கு உட்பட்டு இருக்கையானது அமைக்கப்படுமானால் பணியாளரின் 70% அயர்ச்சியானது குறைக்கப்படுகிறது என்பது உறுதி.

முன்னேறி வரும் விஞ்ஞான உலகில் வீடியோக்களின் இயக்குமுறைப் பயிற்சிகளையும் அணுகுமுறைகளையும் பணியாளர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையினர் செய்தி கொடுத்து நேர்த்தியான ஆரோக்கியமான விஞ்ஞான உலகைப் படைப்பார்கள் என நம்புவோம்.

# திருக்குறளே வாழ்வியற் சட்டம்

திருவள்ளுவர் காலத்தால் நோக்க உயர்ந்தவர்.

திருக்குறள் காட்டும் சமுதாய அமைப்பில் உயர்வு, தாழ்வு இல்லை ஆயினும் இன்றைய தமிழகத்தில் வாழும் நெறி எப்படி இருக்கிறது? ஒரு கடவுள் வழிபாடு இல்லை. மேட்டுக்குடித் தலைவர்கள் சாதிமுறைகளைப் பத்திரமாகப் பாதுகாத்து சிறு தெய்வ வழிபாடுகளை வளக்கப்படுத்துகின்றனர்.

'பிறக்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பெருநெறி காட்டிய தமிழ் நாட்டில் எண்ணத் தொலையாத சாதிகள். இன மத வேற்றுமைகள் பிரிவினைகள், பகைமை வழிப்பட்ட மோதல்கள், அவ்வழியிலாகிய அழுக்காறு, இவை அகன்ற பாடில்லை.

'இன்றும் வருவது கொல்லோநெருநலும் கொன்றது போலும் நிரப்பு' என்று திருவள்ளுவர் வருந்திக் கோடிட்டுக் காட்டிய வறுமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஏன்?

அன்பினால் இணைக்கப்பெற்று ஒருமையுணர்வுடன் வாழ வேண்டிய உயிர்க்குலம் உட்பகையால் உள்ளீடு அழிந்து வருகிறது. இந்த அவல நிலையிலிருந்து தமிழகத்தை, மனித குலத்தை மீட்பதற்குரிய ஒரேவழி திருக்குறளின் அறத்தை வாழ்வியலறமாக, வாழ்வியற் சட்டமாக ஏற்றுக் கொள்வது தான்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

# தமிழ் நாவல் இலக்கிய முன்னேடியாக விளங்கிய கல்கி

கல்கியின் தரம் குறையாத அத்தகைய எழுத்துக்கு 'தியாகபூமி' இதற்கு ஒரு சிறந்த உதாரணம். வரதட்சணைக் கொடுமை, தீண்டாமை, காந்திய தத்துவங்கள், சுதந்திரப்போராட்டம் போன்ற விஷயங்களை மையக்கருத்தாகக் கொண்டு வெளிவந்த போது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நாவல் அது.

கல்கி அவர்களைத் தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் என்று கூறுவார்கள். இவரது எழுத்துக்கள் தமிழ் நாட்டில் தொடர்கதை பத்திரிகை படிக்கும் ஆர்வத்தை, பரபரப்பை ஊட்டியதையும், இன்றைக்கும் தமிழில் வரலாற்றுப் புதினங்களை எழுதும் பலருக்கும் இவர் முன்னேடியாக அமைந்ததையும் யாரும் மறுக்க இயலாது. தமிழில் வரலாற்றுப் புதினங்களின் தந்தை என்று கூட இவரை சி. பாலசுப்ரமணியன் தமது தமிழ் இலக்கிய வரலாறு' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்

சமூக நாவல்கள் மட்டுமல்லாது முதன் முதலில் மிகச் சிறப்பாகச் சரித்திர நாவல்களை எழுதி, அவற்றைப் படிக்கும் ரசனையை மக்களிடையே உயர்த்திய பெருமையும் கல்கியையே சாரும் இவரது பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகிய சரித்திர நவீனங்கள், நாவல் வரலாற்றில் மைல் கற்களாக எண்ணப்படுபவையே.

கல்கி எழுதிக் கொண்டிருந்த காலத்திலேயே தங்களுக்கென்று தனிப் பாணியையும், இலட்சியத்தையும் தங்களுக்கென தனி வாசகர் வட்டத்தையும் உருவாக்கிக் கொண்டவர்களில் லக்ஷ்மியையும், தேவனையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

### சிவசங்கரி

பெண் மனத்தின் உணர்வுகளுக்கு அவள் சார்ந்திருக்கும் குடும்பத்தில் உண்டாகும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அன்று லக்ஷ்மி எழுதிய எழுத்துக்கள் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதென்றால், கல்கிக்கு ஒப்பான நகைச்சுவையில் தேவன் தனித்து விளங்கினர்.

கல்கியின் காலத்தில் தான் வெகுஜனப் பத்திரிகை, இலக்கியப் பத்திரிகை என்கிற பிரிவுக்கு முதல் முதலில் அஸ்திவாரம் போடப்பட்டது என்று நினைக்கிறேன். மணிக்கொடி எழுத்தாளர்களான அறிவு ஜீவிகளாகக் கருதப்பட்ட நா. சிதம்பரசுப்ரமணியம், கு. ப. ரா., பி.எஸ். ராமையா, லா. ச. ரா, ந. பிச்சமூர்த்தி ஆகியோர் எழுதிய நாவல்கள் உலக இலக்கிய தரத்திற்கு ஒப்பாக இருந்தன என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்து.

எளிமையான நடை, அன்றாடம் சந்திக்கும் யதார்த்தமான பாத்திரப் படைப்பு மூலம், இலக்கியத்தையும் ஓரளவு மக்களிடையே பரப்பியவர்களில் தி. ஜானகிராமனுக்குத் தனி இடம் உண்டு. வா. ச. ரா மௌனி எழுத்துக்களில் காணப்பட்ட இறுக்கம், பூடகம் (Rigidness and Abstract Sense) இவரிடம் இல்லாதது இவரை யாரும் எளிதில் படிக்க விரும்பியதற்கு மற்றொரு காரணம்.

50-களின் இறுதியில் 'ஆனந்த விகடனில்' 'கலை[illegible] கொத்தமங்கலம் சுப்பு [illegible] மோகனம்பாள்' பெரும்பாலும் குறிப்பிட்ட சமுதாயத்தினரையே கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்டு வந்த நிலையை மாற்றி ஒரு நாட்டியக்காரி, நாதசுர வித்துவான் இவர்களையே முக்கிய பாத்திரங்களாக ஏற்று அவர்களின் நடைமுறை பழக்கம், மொழி என்று அத்தனையிலும் மாறுபட்டு விளங்கிய புதினம்; கல்கியின் 'தியாகபூமி' வெளியானபோது எழுந்த பரபரப்பை இந்த நாவலும் உண்டாக்கியது என்றும் சொல்லுவர்.

### தமிழக நாவல் இலக்கியம்: அதன் வளர்ச்சியும் தேக்கமும்

### பகுதி-III

அடுத்து முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை டாக்டர் மு. வ. வின் சமூகநாவல்கள், தூய தமிழ்நடை, தமிழ்ப் பெயர்களைக் கொண்ட பாத்திரங்கள், மென்மையான காதல், லட்சியம், எல்லாம் இவரது புதினங்களின் சிறப்புகள். கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், கள்ளோ காவியமோ? ஆகியவற்றை இந்த ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

கல்கி அவர்களின் எழுத்[illegible] ஓர் அந்நியோன்யத்தைத் [illegible] நந்தினி போன்ற பாத்திரப் பெயர்கள் பல குடும்பங்களில் இடப்பட்டதைப் போலவே தமிழ்ப் பெயர்களைப் பலர் விரும்பிச் சூட்டிக் கொள்வதற்கு மு. வ. வின் எழுத்துக்களே காரணமாயின. ஜாதி, சமயத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்வு தோன்றிவிட்ட காலமாதலால் அந்தக் கொடுமைகளைத் தொட்டு எழுதப்பட்ட மு. வ. வின் புதினங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன.

இந்தச் சமயத்தில் தரமான எழுத்துக்களைப் படிக்கும் தாகம் மக்களிடையே அதிகமாகக் காணப்பட்ட சரத்சந்திரர், காண்டேகர் போன்ற வங்க மராட்டிய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரபல்யமாயின.

கல்கியை ஒரு ஆரம்பகால ட்ரண்ட் ஸெட்டர் என்ற கருத்துடன் பார்க்கும்போது, இவரது எழுத்துக்களால் பாதிக்கப்பட்டு ஓர் எழுத்தாளர் கூட்டமே உருவாகியிருப்பது புரிகிறது.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

# கணவனின் சிகரெட்டினல் மனைவிக்கு பெருந்தொல்லை

சிகரெட் புகைக்கும் ஆண்களைத் திருமணம் செய்த பெண்களுக்கு சிகரெட் புகைக்காத ஆண்களைத் திருமணம் செய்த பெண்களை விட இருதயத்தாக்கு ஏற்படுவதற்கு மூன்று மடங்குகள் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இவ்வாறு சுவிஸ்சர்லாந்து நாட்டின் விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்.

சிகரெட் புகைக்காதவர்கள் சிகரெட் புகைக்கும் இரண்டாவது நபரிடமிருந்து தம்மைக் காக்க வேண்டியிருப்பதாக அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலாசாரம் திசைதிரும்ப வழி வகுக்கின்றது தமிழ் - 6

1980 ஆம் ஆண்டிலும் 1982 ஆம் ஆண்டிலும் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் ஐந்தாம்வகுப்பிற்காக வெளியிடப்பட்ட தமிழ் ஐந்து என்ற பாடநூல் இதுவரை காலமும் ஆறும் ஆண்டு மாணவர்களின் பாவனையில் இருந்தது. தமிழ் ஆண்டு 1, 2, 3, 4, 5 என்ற நூல்களின் தொடர்ச்சியாகவே தமிழ் ஆண்டு 6 என்ற புதிய நூல் தற்சமயம் வந்துள்ளது.

இப்புதிய தமிழ் 6 நூலில் 36 உரைநடைப் படங்களும் 8 செய்யுள் பாடங்களும் அடங்கியுள்ளன மொத்தமாக நாற்பத்துநான்கு பாடங்களை உள்ளடக்கி 220 பக்கங்களைக் கொண்டுள்ளது

இந்நூலில் தமிழர் கலாசாரத்தோடு தொடர்புடைய ஆறு பாடங்கள் உண்டு. முஸ்லிம் கலாசாரத்தோடு தொடர்புடைய பத்து பாடங்களும் சிங்கள கலாசாரத்தோடு தொடர்புடைய இரண்டு பாடங்களும் இடம் பெற்றுள்ளன பொதுவாக 26 பாடங்களும் 8 செய்யுட் பாடங்களும் அடங்கியுள்ளன.

பழைய தமிழ் 5 இல் எல்லா மதங்களுக்கும் பொதுவான கருத்தை வலியுறுத்தும் வகையில் கடவுள் வாழ்த்து என்னும் பாடம் முதற்பாடமாக அமைந்திருந்தது இப்பாடத்தை முற்றாக நீக்கி விட்டு பதிலாக ''வளரும் பயிர்'' என்ற தலைப்பில் முதற்பாடம் ஆரம்பிக்கப்படுகிறது.

இதேபோல நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பற்றிய பாடமும் நீக்கப்பட்டுள்ளது ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் கிறிஸ்தவத்தையும் தமிழையும் இஸ்லாத்தையும் தமிழையும் வளர்த்த அறிஞர்கள் பலர் இருந்தும் அவர்களது கட்டுரைகள் இடம் பெறாமல் போனது பெரும் ஏமாற்றத்திற்குரிய விடயமாகும். காலத்தால் மறக்கமுடியாத பெரியார்களை இளம் சந்ததியினர் அறிந்து அவர்களைப் பின்பற்றிச் செல்ல வழிகாட்டப்படாமல் பிறநாட்டவர்களின் வரலாற்றுக் கட்டுரைகளை வேண்டுமென்றே தணித்துள்ளனர்.

## நல்லவை நீக்கி அல்லவை தாங்கி வெளியாகியுள்ளது

பழைய தமிழ் 5 இல் 18 ஆம் பாடமாக அமைந்த ஈழத்து முஸ்லிம் பெரியார்களுள் தலைசிறந்தவரான டாக்டர் துவான் புர்கானுத்தீன் ஜாயா பற்றிய பாடத்தை முற்றாக நீக்கிவிட்டு ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள எகிப்து என்ற நாட்டில் அந்நிய ராட்சிக்கு எதிராக எகிப்திய தேசிய இயக்கம் ஒன்றிற்கு தலைவராக விளங்கிய அஹ்மத் ஓராபி அல்மிஸ்ரி என்பவரைப் பற்றிய கட்டுரை புதிய தமிழ் 6 இல் இடம் பெற்றமை பெரும் கவலைக்குரிய விடயமாகும். அவர் எகிப்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பழைய தமிழ் 5 இல் டாக்டர் டி. பி. ஜாயா என்ற பாடத்தில் உரைநடைகள் மிக எளிய முறையிலும் அழகிய தமிழ் நடையிலும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் புதிய தமிழ் 6ல் வட எழுத்துக்களும் உச்சரிக்க முடியாத எழுத்துக்களும் எழுத்துப் பிழைகளும் புத்தகம் முழுவதுமே விரவிக் கிடக்கின்றன.

ஈழத்தின் தமிழ் வளர்த்த பெரியார் வரிசையில் சி. வை. தாமோதரம்பிள்ளை தொடர்பான கட்டுரை புதிய நூலில் இடம் பெற்றிருந்த போதும் முன்பு சோமசுந்தரப் புலவர் பற்றிய பாடம் தமிழ் 5ல் ஐந்தாம் பாடமாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க விடயம் ஆகும் ஆனால் 6ம் ஆண்டு தமிழ் 6ல் 5ம் பாடமாக கண்டிப் பெரகரா என்ற பாடம் அமைந்துள்ளதோடு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பாடம் 39 ஆவது பாடமாக இடம்பெற்றுள்ளது. தமிழ் மக்களின் கலாசாரத்தையும் வரலாற்றையும் பிரதிபலிக்காத வகையில் தமிழர் வரலாற்றையும் பாரம்பரியங்களையும் மறைக்க முயற்சிப்பதுபோல 6ஆம் ஆண்டு தமிழ் நூல் அமைந்துள்ளது. விசேடமாக தமிழ் 5இல் 27 ஆம் பாடமாக இருந்த பொலநறுவை என்ற பாடத்தில் பொலநறுவையும் அனுராதபுரமும் தமிழ் மன்னர்களின் தலைநகர்களாக விளங்கியதாக வரலாற்றுச் சான்றுகளுடன் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை முற்றாக நீக்கி புதிய தமிழ் 6 இல் 25 ஆம் பாடமாக மகாபராக்கிரமபாகு என்னும் பாடம் இடம்பெற்றுள்ளது. இப்பாடத்தில் முற்காலத்தில் இலங்கையை அரசர்கள் ஆண்டு வந்தனர் அவர்களுள் காமினி மகாசேனன் முதலாம் பராக்கிரமபாகு முதலிய அரசர்கள் முக்கியமானவர்கள் என்ற வாக்கியம் முதற்பந்தியிலேயே அமைந்துள்ளது. இப்பந்தியில் இலங்கையில் இருந்து ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் பற்றிய வரலாறு முற்றாக மறைக்கப்பட்டுள்ளது.

### ( சி. வல்லிபுரம் )

விரமாத்தாண்டதேவர் என்பவரால் தமிழில் பாடப்பட்ட பஞ்சதந்திரக் கதைகளைக் கூறும் பாடங்களும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடல்களும் நன்னெறி சிவசிந்தாமணி போன்ற மாணவர்களின் ஒழுக்க நெறிகளையும் அன்பின் பெருமையையும் இன்சொல்லின் மகத்துவத்தையும் பழைய நூலில் தெளிவுபடக்காட்டப்பட்டிருந்ததுடன் ஔவைப் பாட்டியாரின் 'அரியது எது' 'இனியது' என்னும் தலைப்பில் அரியது எது? இனியது எது? நிலையானது எது? நிலையற்றது எது? என்ற கருத்துக்களைப் பற்றியும் இவ்வுலகில் கிடைக்கத்தக்க நிலையான பேரின்பப் பெருவாழ்வைப் பற்றியும் அடங்கும் அரிய பாடல்களும் அடங்கிக் கிடந்தன

ஆனால் புதிய தமிழ் 6 இல் நன்னெறி திருக்குறள் நல்வழி போன்ற சிறந்த நூல்களில் உள்ள செய்யுள்கள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. இப்படியான நல்வழி, நன்னெறி குறள் சிவசிந்தாமணி போன்ற நூல்களில் உள்ள செய்யுள்கள் இல்லாத இப்புதிய ஆண்டு ஆறு தமிழ் நூல்களை நாம் ஏற்றுக்கொள்ளுவோமானால் எமது எதிர்காலச் சமுதாயத்திற்குச் செய்யும் பெருந்துரோகமாக அது அமைந்துவிடும்.

பழைய தமிழ் 5 இல் பாடங்களிலுள்ள உரைநடைகளும் செய்யுள்களும் ஒவ்வொன்று ஒன்றுடன் தொடர்புடையதோடு அந்தந்தப் பாடங்களின் இறுதியிலே விசேடமான விளக்கங்களும் கருப்பதவுரைகளும் இலக்கணங்களும் மொழிப்பயிற்சிகளும் வகுப்பிற்கும் வயதிற்குமேற்ப அமைந்திருந்தன புதிய தமிழ் நூலில் இருக்குமாறு நான்கு பாடங்களின் முடிவிலேயே மொழிப் பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன

சுருக்கச் சொன்னால் இப்புதிய தமிழ் நூலில் பல குறைகள் மேற்கொள்ளப்பட்டன சமயம், பண்பாடு, மொழி என்பன ஊறுவப்படுத்துள்ளன. எது எப்படி அமைந்த போதிலும் விகிதாசார அடிப்படையில் கூட நூலில் பாடங்கள் இடம் பெறவில்லை கிறிஸ்தவத்தையும் தமிழையும் வளர்த்த பாதிரியார்களின் வரலாறு வெளிப்படுத்தும் கட்டுரை ஒன்றுகூட இடம் பெறாமை மிகவும் வேதனைக்குரியதே

இருந்தபோதும் புதிய தமிழ் நூலில் இருபதாவது பாடத்தில் வரும் திரு. பா. சத்தியசீலன் இயற்றிய அருளாளர் என்ற தலைப்பினுள் அடங்கும் 5 செய்யுள்களுள் முதலாவது பாடலில் யேசுநாதரைப்பற்றி ஒரு பாடலே இடம் பெற்றுள்ளது எனபதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நூல்களை ஆக்கி வெளியிடும் நூலாக்க குழுவினர் இது விடயத்தில் எந்த மதத்தினரும் பாதிக்காத வகையில் நூல்களை ஆக்கி வெளியிட வேண்டும் என்பதும் விகித அடிப்படையைப் பேணுவது சமயத்தில் கொள்வது ஓரளவு பொருந்தும் என்பதும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும்.

## தண்ணீரும் மருந்தே!

தண்ணீரை நன்றாகக் கொதிக்கவைத்து, ஆறவிட்டு குடித்துப் பருகுதல் மிகவும் நல்லது.


வெண்ணெய் நீக்கிய மோருக்கு நீர் கலந்து பருகுதல் மிகவும் நல்லது மோராகாரம் இரத்தக் குழாய்களில் கொழுப்பு பிடிக்காமல் தடுக்கும் நீர் பருகுதல் அருமையான சிகிச்சை,

காலையில் ஐந்து ஆறு கிண்ணம் நீர் பருகுவதோடு கடாயில்லாத வேளையிலும் பருகுதல் மிகவும் பயன்தரும்.

உணவு உண்டபின் கால் வயிறு நீரருந்துதல் நல்லது நீர் பருகுவதால் பலவித நோய்கள் குணமாகியுள்ளன என்று மருத்துவ அதிகாரிகள் கூறுகிறார்கள்.

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 37



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி.......................

...............................................

வயது: ...............

விலாசம் ...............

...............

ஒப்பம்: ...............

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

**இடமிருந்து வலம்**

1 வாழ்த்துதல்
6 தூரத்தை அளப்பதற்கு முன்னர் பாவிக்கப்பட்டது! இடமோது வழக்கில் குறைவு
7 சூரியன்
8. சாந்தம் நிரம்பியவன்
9 ஏதுவானோர்
10 தப்பாக்கியிலிருந்து சீறி வருவது
11 தூற்று
12. கணவன்
13. மாதங்களில் ஒன்று
14. ஆபரணம்
16 இரட்டித்தது
19 அரைவாசி
20 நூறைக் குறிப்பது
21 செய்தி கொண்டு செல்பவர்
22 நன்கொடைப் பொருள்
23 விருப்பு

**மேலிருந்து கீழ்**

1 விட்டு வேலைக்காரியைக் குறிக்கும் சிங்களச் சொல் ஆனால் இப்போது பலர் தமிழிலும் அதனை அப்படியே பயன்படுத்துகின்றனர்
2. சம்பந்தப் பெருமான் அவதரித்த திருத்தலம்
3. யானை
4. நீக்கிக்கொள்
5. திருமணம்
8. வாகனம் செலுத்துபவன்
11 தசம்
12. நட்புக்கு எதிரானது
13. தவறன் தலைகீழாக நிற்கிறார்
14. எங்களுடைய
15. நடனம்
17. இழிவுரை
18. வயதில் குறைந்தவன்
19. மனித அவயவங்களில் ஆகக் கீழே இருப்பது
21 பரிசுத்தமான

### சொற்சிலம்பம் இல. 35 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. பரகதி, 2. திவம் 3 திருப்பதி. 4. பசி 6. மதியம், 8 மலைகள். 11. அதிசயம், 12 திசை. 14. குயுக்தி 16. வணிகன் 17. வேப, 20. கவி. 21. வேலி,

**இடமிருந்து வலம்**

1. பத்திராதிபர், 5 ருசி 7. சமம், 9. ஆதி, 10 திவை, 11. அதிதி, 13 விகுதி, 15 வசவம், 18 .புயம், 19. பக்கம், 21. மேகம், 22 விதி, 23 கவிதை,

### சொற்சிலம்பம் இல. 35 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- திரு நா. தர்மலிங்கம், ஆவரங்கால் ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

இரண்டாம் பரிசு:- செல்வி நிர்மலாதேவி தர்மலிங்கம், நீர்வேலி தெற்கு. நீர்வேலி.

மூன்றாம் பரிசு:- செல்வி. ப அருளானந்தன், வாழ்வை வீதி, உதயபுரம் அலுவலகம், யாழ்ப்பாணம்

★ குறிப்பு:- பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

## இசைக்கும் நடனத்திற்கும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றவர் ஒரு பெரிய 'சூட்கேஸ்' நிரம்பிய நூல்களுடன் வெளியே வருகின்றார்.

-அதன் சுமை அவரது கைகளில் தெரிகிறது.

-அதன் பெருமிதம் அவரது முகத்தில் தெரிகிறது.

அத்தனையும் அவரது கற்பனையின் பிரசவங்கள்!

பாராட்டுகள்

மேசை மீதிருந்த மின் விசிறியால் நிலைகுலைந்த 'பைல்' ஒன்று காற்றில் பறந்து கலந்து சங்கமிக்கப் பார்க்கின்றது.

அத்தனையும் இந்த மேதையைப் பற்றி இசைத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் சொல்லி வைத்த சான்றுகள்.

அந்த 'பைல்'லிலிருந்து பறந்து வந்து எனது கரங்களுக்குள் கிடைத்தவற்றில் பாபநாசம்சிவன் சொல்கின்றார்—

'தித்திக்கும் தேன்தமிழில் நவரஸமுடன் பக்திரஸமும் ததும்ப இலக்கணச்சுவை குன்றாது பாட வல்லவர் வீரமணி ஐயர்'

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் இப்படிக் கூறுகிறார்:

'இதப்பண் அமைதியோடு நடனம் ஆடும். கிளர்கின்ற முத்திரைகள் அழகு கூட்டும். ஆதரவுற்றே பாட இறைவன் இவரை அகத்திருத்தி அன்பு செய்வார்' என்கின்றார்.

'வீரமணி ஐயர் வித்தகத்தை என்ன வென்பேன். ஈரமிகு தமிழில் சந்திடுவார் நல்லமுதை' என்றவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை.

'காலத்தால் அழிக்கப்பட முடியாதவர்' என்கின்றார் திருமதி ருக்மணி அருண்டேல்

'மெய்ப்பாட்டுச் சுவைகளும் கற்பனைகளும் தாள அமைதியும் மிக நயமாக அமைந்து விளங்குபவர்' எனச் சொல்லி வைத்தார் மகாவித்துவான் கணேசய்யர்.

—இவரைப் பாராட்டி விதந்தவர்கள் அனேகர்.

எதிரும் புதிருமான பாலமுரளி கிருஷ்ணாவும் பாலசந்தரும் பாராட்டியுள்ளனர். டி. எம். சௌந்தரராஜன், குலமங்கலம் ராஜலக்ஷ்மி சகோதரிகள், கிருபானந்தவாரியார், பண்டிதர் இளமுருகனார், முடிகொண்டான் வெங்கட்ராமய்யர், சுத்தானந்த பாரதி, செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யங்கார், முசிறி சுப்பிரமணிய அய்யர், ஜீ என் பாலசுப்பிரமணியம்-

-இப்படிப் பட்டியலே நீளும் அவர்களது கையெழுத்துகளைப் பார்த்த ஆத்ம சுகம் எனக்கு.

ராகங்களில் பெரும்பான்மையானவை மாதரின் பெயருடையனவாகவே அமைந்திருக்கின்றன உதாரணமாக... வசந்தா, நீலாம்பரி, கல்யாணி, பைரவி, ஜகன்மோகினி இன்னும் பல இதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?

இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம் வேங்கடமகி என்ற முனிவர் 72 மேளகர்த்தாக்களை அமைத்தார் என்றும் சரஸ்வதி கடாஷம் பெற்றே அமைத்தார் என்றும் அதனால் அம்பாளுக்கு அர்ப்பணமாக தாய்குலத்தாருக்கு இராகங்களின் பெயர்கள் சூட்டப்பட்டன என்றும் கொள்ளலாம்.

கலைமகள் கையிலிருக்கும் வீணை 'விபஞ்சி' பெண்ணின் குணதிசயங்கள் கொண்டதாக வர்ணிக்கப்படுகின்றது. எனவே அதன் குரலான ராகங்களும் பெண்ராகமாக ஒலிப்பதில் தவறும் இல்லை - வியப்பும் இல்லை. தவிர பெண் என்றால் கவர்ச்சி இனிமை எனவும் கூறலாம். ராகங்களும் அத்தன்மை வாய்ந்தனவே.

தமிழிசை

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு போன்ற விழாக்கள் அனைத்துலகத் தமிழ் மக்களையும்ஒருங்கிணைத்து நடைபெறுவதுபோல தமிழ் இசைவிழாக்களும் அகில உலக ரீதியாக வியாபிக்க வழிகள் உண்டா?

இசை இனியது. தமிழிசை அதனிலும் இனியது. உள்ளத்தோடு உணர்வோடு பொருந்தியது. ஏற்றமுள்ளது. தமிழிசையை வளர்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்துள்ளது. ஆனாலும் மொழி புரியாத பாடகன் பாஷை புரியாத பாடலை, புரிந்தவன் போல பாசாங்கு செய்து, அட்சர சுத்தங்களைத் தவறாக உச்சரித்து சங்கீதம் என்றால் இது தான் என்று பாடுகின்றான்

புரியாத ரசிகர்களும் தலையை ஆட்டி இசையை மட்டும் ரசித்து விட்டு, இதுதான் சங்கீதம் என்று திருப்திப்படுகிறார்கள்.

இந்த மனோநிலை மாறினால் நிச்சயமாகத் தமிழிசை உலகமெங்கும் வியாபித்து விழாக்காணும்.

கர்நாடக சங்கீதம் வளர்ந்துள்ளதா?

கர்நாடக சங்கீதத்தில் ஏற்பட்டுள்ள ஆர்வம் மட்டும்தான் வளர்ந்துள்ளதே தவிர ஆக்கபூர்வமான சாதனைகள் ஆயிரத்தில் ஒன்றுதான் வளர்ந்துள்ளது.

பரதமும் நாட்டிய நாடகமும்

பல நாட்டிய நாடகங்களிலும் தாங்கள் முத்திரை பதித்துள்ளீர்கள். அவை பற்றி...?

நவரஸங்களும் மனிதனுடைய உணர்ச்சிகளில் இரண்டறக் கலந்துள்ளன. இந்த நவரஸங்களின் பிரதிபலிப்பு தெய்வீகத்துடன் இணையக் கூடிய ஒரு மார்க்கம்தான் இசையும் நாட்டியங்களும் எமது கலை வெறும் பொழுது போக்குக்காக மட்டும் ஏற்பட்டது அல்ல. ஆண்டவன் அருளாலே கிடைத்தது பரதக்கலை. இது இறைவனுக்குத்தான் சொந்தம்.

இன்னுமொரு சிறப்பு அந்த இறைவனே நடனக் கலையைப் போற்றுவதுதான். எனவே இந்தக் கலையின் பெருமை யாரால் சொல்ல முடியும்? அவ்வளவு உயர்வானது இந்தக் கலையாகும்.

ஒவ்வொரு பாத்திரமும் அபிநயத்துடன், சங்கீதத்துடன், லயத்துடன், பாவத்துடன் சித்திரிக்கப்படும்போது மெருகுகூடி எல்லோர் மனங்களிலும் லயித்து விடும் தன்மை உருவாகின்றது.

பரதநாட்டியமும் நாட்டிய நாடகங்களும் வித்தியாசமானவை அல்ல. பரதத்தில் தனியொருவர் பல பாத்திர வடிவங்களாக அபிநயிக்கின்றார். நாட்டிய நாடகம் அதனையே பலர் மூலம் செய்விக்கின்றது —பரதத்தின் மரபு கட்டாயமாக எங்கும் பேணப்படவேண்டும். அந்நிய கலாசாரம் கலந்தால் தெய்வீகம் மறைந்துவிடும்.

ஓய்வு பெறுவதற்கான வயது அவருக்கு இன்னமும் வரவில்லையே என்ற சந்தேகத்துடன்,ஆச்சரியமாக அவரைப்பார்த்த எனது எண்ணத்தை அனுமானித்துக் கொண்டவர்போல அவரே சொல்கிறார்.

கலைஞனது வாழ்வில் தோல்வியே கிடையாது. கற்பனை வளம் நிறைந்திருப்பதால் சதாமகிழ்ச்சியே குடி கொள்ளும். அதனால் உள்ளமும் உடலும் என்றும் இளமையோடிருக்கும்.

பாரதி வறுமையால் வாடிய பொழுதும் கற்பனை உயர்ந்து நின்றதால், சிங்கமராட்டியருக்கு எந்த அரசனும் கொடுக்கமுடியாத சேரத்துத் தந்தங்களை அள்ளி அள்ளிக் கொடுத்தான்.

தியாகராஜ சுவாமிகள் சுபபந்துவராலி ராகத்தில் பாடிய சாஹித்தியமும் ராகபாவமும் சோகத்தைக் கலைத்து கலையின்பத்தில் ஆழ்த்தின. அங்கு சோகம் இன்பமயமாகியது அதனால் இனித்தது என்றார்.

பதியுதீன் தந்த பரிசு

யாழ் பல்கலைக்கழகத்தில் இசை, நடன, சித்திர வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு தூண்டுகோலாகத் திகழ்ந்தவர் தாங்கள் என அறிய முடிந்தது. உண்மையா?

ஆம்! நண்பர் எஸ். எம். கமாலுதீன் 99 நாமாவளிகொண்ட இஸ்லாமிய கீர்த்தனைகளை இயற்றித் தரும்படி என்னிடம் கோரியிருந்தார். நானும் அவ்வாறே செய்து முடித்தேன். அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் பதியுதீன் முகமது எனது இஸ்லாமிய கீர்த்தனைகளைப் பார்த்த பின்னால் என்னை நேரில் பாராட்டினார்.

அவர் தன்னிடம் எந்த உதவியையும் தயங்காமல் கேட்கலாம் என்றதற்கு, எனக்கு "பிரமோஷன்" வேண்டாம். மாறாக யாழ். பல்கலைக் கழகத்தில் இசை, நடனப் பிரிவுகள் அமைய ஏற்பாடு செய்யுமாறு வேண்டினேன்.

அதன் பயன் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று சர்வதேச தரத்திற்கு இசை வித்வான்களாக நாட்டிய மேதைகளாக உயர்ந்துள்ளார்கள்.

இதனால் உள்ளம் பூரிப்படைகின்றேன் என்றார். [illegible] மருந்து விடைபெறுகின்றேன். ★

## நவராத்திரி நாயகிகள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் காத்யாயனியாகவும் மகாலக்ஷ்மியைப் பார்க்கவியாகவும் குழந்தைகளாக்கி அந்தப் பாவத்திலேயே வழிபட்டால் நமக்கும் குழந்தைத்தன்மை சாக்ஷாத்கரித்துவிடும்.

குழந்தையாக வந்த காத்யாயனியைத் தமிழ் நாட்டுக் கிராம ஜனங்கள் கூட நீண்டகாலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது 'காத்தாயி' என்று சொல்கிற கிராமதேவதை "கார்த்யாயனி" தான் என்று சொல்லலாம்.

பிடாரி

'பட்டாரிகை' என்று பெரிய ஸ்ரீ வித்யோ பாசகர்கள் குறிப்பிடும் அம்பாளைத்தான் நம் கிராம மக்கள் 'பிடாரி' என்று சொல்லிப் பூஜிக்கிறார்கள் பழைய செப்பேடுகளில் பட்டாரிகா மான்யம் என்பதை படாரி மானியம் என்று குறிப்பிடுவதிலிருந்து இதை உணரலாம்.

இவ்வாறே நம் கிராம ஜனங்களும் கூட சரஸ்வதியை நீண்ட காலமாக வழிபட்டிருக்கிறார்கள். 'பேச்சாயி, பேச்சாயி' என்று சொல்கிற கிராம தேவதை பேச்சுக்குஆயியானவாக்தேவிதான் சரஸ்வதியைக் குறிப்பிடுகிறது.

அம்பாளையும் மகாலக்ஷ்மியையும் சரஸ்வதி தேவியையும் பூஜித்து எல்லோரும் சக்தியும், சம்பத்தும், நல்ல புத்தியும் பெறுவோமாக ★

## விஜயதசமித் திருவிழா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் போன்ற நூல்களும் பாராயணம் செய்வதற்கு உரியதே அம்பிகைக்கு ''நாமபாராயணப்ரீதா'' என்று ஒரு பெயர். ஒன்பது நாட்களும் அன்னையைக் கொலுவிருத்தி வழிபட்டும் வெற்றித் திருநாளாகியவிஜயதசமியில்,சோம்பல், தாமதம் மடமை, இவைகளின் ஒட்டு மொத்த உருவாகிய மகிடாசுரனை அன்னை அம்பெய்து அழிக்கும் காட்சியைக் காண்கின்றோம். நம் உள்ளத்தே குடிகொண்ட தீமைகளைப் பொசுக்கும் பொருட்டும் ஞானப் பிழம்பான அன்னையை வழிபடுவதும் இத்திருநாளின் சிறப்பு அம்சமாகும். ஞானத்தை வேண்டி இளம் சிறார்களுக்கு ஏடு துவக்குவதும், தொழில் துவங்குவதும் வெற்றிப்பாதையிலே வீறுநடைபோட வைக்கும்.

அவ்யாஜ கருணாமூர்த்தியாக வரப்ரதாயினியாகத் திகழும் சக்தியை நவ நவமான அலங்காரங்கள் செய்து நவராத்திரி விழாவிலே தரிசித்த மக்கள் நலம் பல பெறுகின்றனர். வற்றாத கருணை ஊற்றாய் தேடி வருபவர்களின் துன்பத்தைத் துடைத்து ஆற்றுப் பெருக்காய் அருள் சுரக்கும் அன்னையின் தண்ணளியைப் பெற்றுப் பயனடைந்தவர்கள் பலர். சேய்மையில் இருப்பவர்க்கும் தன் அருளொளி காட்டி அருகே கூட்டி துன்பத்தை வாட்டி, இன்பத்தை ஊட்டும் சக்தி நமது வாழ்வின் உயிர்ப்பாகி வீற்றிருக்கின்றாள் என்பதற்கு சான்றுரைக்க வேண்டுமோ? ★

## காலத்தால் அழியாத...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அதை சுவீகரித்துக் கொண்டும், ஓரளவு தழுவியும் சென்றது. இவ்விதமான முறைகளைக் கையாண்டு, கடைசியில் அதைத் தனது பிறந்த நாட்டினின்றும் துரத்திவிட்டது.

ஆகவே இப்புதிய பிராமண மதம், பௌத்த மதம் சாதித்தவற்றை யெல்லாம் ஒழித்து நீக்கி விட்டு மீண்டும் பழைய நிலைமைகளையே நாட்டில் ஏற்படுத்திற்று என்று கூறுவதற்கில்லை. அக்காலத்துப் பிராமண மதசாரிகள் உலகில் அறிவு நிரம்பப் படைத்தவர்கள், ஆதி நாளிலிருந்து அவர்கள் வேற்றுக் கொள்கைகள் எவற்றையும் தம்முள்கொண்டு அவற்றைத் தம்மோடு இயைபுடையனவாகச் செய்துகொள்வது வழக்கமாயிருந்து வருகிறது. ஆரியர்கள் முதல்முதல் இந்தியாவுக்கு வந்த பொழுது அவர்கள் திராவிடக்கலை நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் ஏற்று அவற்றைத் தம் வாழ்க்கையில் பொருந்துமாறு அமைத்துக் கொண்டனர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஓர் நற்செய்தி**

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நிலசோப் புது வாசனையுடனும் கூடிய நிறையுடனும் எங்கும் விற்பனையாகிறது.

விலை ரூ. 2.00மட்டுமே.

10 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

—மில்க்வைற் யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

11 - 10 - 1986 சனிக்கிழமை



**சிக்கனமே சிறந்த செல்வம்**

சீன சலவைக்கு கூடிய நிறையுடன் விற்பனையாகும் மில்க்வைற் பார்சோப்பை வாங்கி உபயோகியுங்கள்.

| | |
|---|---|
| பெரிய பார்சோப் | ரூ 12.00 |
| சிறிய பார்சோப் | ரூ. 6.00 |
| மினி பார்சோப் | ரூ 2.50 |

8 மேலுறைகளை அனுப்பி அழகிய சரஸ்வதி கிரிட்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

—மில்க்வைற்—யாழ்ப்பாணம்.


இன்று ஆரம்பமாகும்

# உச்சிப் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமா?

1972 ஆம் ஆண்டு உலக செஸ்சாம்பியன் போட்டி நடைபெற்ற இடம்தான் ரெயாவிக். ஐஸ்லாந்தின் தலைநகரம் இது.

14 வருடங்கள் கழிந்து ரெயாவிக்கின் பெயர் இன்று மீண்டும் சரித்திரத்தில் இடம்பெறுகிறது. கடைசியாக நடைபெற்ற வியானா மீனான அமெரிக்கக் குண்டு வீச்சு உட்பட சில சம்பவங்கள் அமெரிக்காவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி இருப்பதாக நம்பப்படுகிறது.

எனினும் தற்போதைய உச்சிமாநாட்டின் முக்கிய நோக்கம் ஆயுதக் கட்டுப்பாடும் ஆயுதக் குறைப்புமே என்பதால் இரு தலைவர்களுக்கும் இடையிலான பேரம் மிகவும் கடுமையானதாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தலைவர்களும் இன்று சனிக்கிழமை இருமணி நேரமும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரு மணி நேரமுமாக மொத்தம் நான்கு மணி நேரமே சந்திப்பார்கள்.

உச்சிப் பேச்சுச் செய்திகளை சேகரிப்பதற்காக ஏற்கனவே சுமார் மூவாயிரம் பத்திரிகையாளர்கள் ரெயாவிக்கில் கூடி இருப்பதை அடுத்து ரெயாவிக் நகரம் சுறுசுறுப்படைந்துள்ளது.

சமீபத்தில் சோவியத் யூனியனும் விடுதலை செய்த அமெரிக்கப் பிரதிநிதி சபையான டானிலொவ்க்கு விடுத்திருந்தார்.

தமது கைக்கு கட்டுப்பட்ட சோவியத் அதிபருடன் தமது பேரம் பேசும் பலத்தைக் குறைக்க வேண்டாம் என்பதே அந்த வேண்டுகோள் ஆகும்.



றேகன்



கொர்பச்சேவ்

தேச அரங்கில் அடிபட ஆரம்பித்திருக்கிறது.

1972 ஆம் ஆண்டு நடந்த சதுரங்க (செஸ்) இறுதிப் போட்டியில் அமெரிக்கரான பிஷேரும் ரஷ்யரான ஸ்பாஸ்கியும் மோதினர்.

1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் றேகன் ஜனாதிபதியாக பதவி ஏற்ற நாள் தொடக்கம் காங்கிரஸில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியே பெரும்பான்மையாக

## உலக உலா

என்.பி.சீலன்

தற்போது நடக்கும் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் இரு நாடுகளினதும் தலைவர்களும் மோதவிருக்கின்றனர்.

உச்சி மாநாடு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகின்றது.

சோவியத் அதிபர் மிக்கெயில் கொர்பச்சேவ் அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகனைவிட சாதகமான சூழ்நிலையில் மாநாட்டில் பங்குபற்றுகிறார் என்பது பெரும்பாலான அவதானிகளின் கருத்து.

வப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளரான டானிலொப்பும் செய்தி சேகரிக்க ரெயாவிக் வருகிறார்.

ரெயாவிக் உச்சி மாநாடு ஒரு பூர்வாங்க மாநாடாகவே இருக்கும்.

வருட இறுதியில் இரு தலைவர்களும் மீண்டும் வாஷிங்டனில் சந்தித்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரெயாவிக் வரும் முன்னர் அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் வேண்டுகோள் ஒன்றை

இருந்துவருகிறது.

செய்மதிகளை அழிக்கும் ஆயுத உற்பத்திப் பரிசோதனை, அணுகுண்டும், இரசாயன ஆயுத உற்பத்திக்கடை, றேகன் நிர்வாகத்தினால் ஏற்கமறுக்கப்பட்ட 'சோல்ட்' எனப்படும் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஆகியவை தொடர்பாக றேகனுடன் எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சி முரண்பாடு கொண்டுள்ளது.

ஸ்ராலினின் பின்பு பதவிக்கு வந்த சோவியத் தலைவர்களில் மிக்கெயில் கொர்பச்சேவ் நிதானமானவர் என்று கருதப்படுவதால் உச்சி பேச்சுக்கள் குறிப்பிடத்தக்க அளவு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இலங்கைப் பல்கலைக்கழகங்களின்

**வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்**

கல்வியாண்டு 87 / 88

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், திருவரச சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (B.Sc.) (கணிதம்)

வர்த்தகமாணி (B.Com.) சட்டமாணி (LL.B.)

விண்ணப்பங்கள் ஒக்டோபர் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் 'பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்' என்ற பெயருக்கு ரூபா 10 இற்கான காசுக் கட்டளையுடன் சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

* க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள் முடிவுகிடைக்கும் வரை பயிற்சி வகுப்புகளுக்கு இலவசமாக அனுமதிக்கப்படுவர்.

பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 2 - 11 - 86

பதிவாளர்:

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (A. S. சுந்தரம்பிள்ளை கட்டிடம், 1ம் மாடி.)

கிளை: 101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கிக்கு அருகாமையில்)


## ★நவராத்திரி விழா★

### ஊரெழுவில்

யாழ்ப்பாணம், அக் 11

மதி அக்கடமி (மதி ஊரெழு), மதி கலைஞர் வட்டம் (மகவம்) ஆகியன இணைந்து நடத்தும் நாமகள் விழா நாளை ஞாயிறு பிற்பகல் ஊரெழு மதி அக்கடமியில் நடைபெறும்.

மதி அக்கடமி, மகவம் தலைவர் வேல் அமிர்தன் தலைமை வகிப்பார்.

'சக்தி வழிபாடும் சமுதாயமும்' — என்ற பொருள் பற்றி சட்டத்தரணி திரு கே. வி. மகாதேவன் பேசுவார்.

நாதகானம், அபிநயகானம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

(உ-எ)

### சட்டநாதர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், அக் 11

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் விஜயதசமி விழா நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சிவன்கோயில் மண்டபத்தில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நாளை ஞாயிறு நடைபெறும்

திருமுறை அமுதம் ஒலிப்பதிவு நாடாக்களை யாழ் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் வெளியிட்டு வைப்பார்.

(உ-எ)

### சுன்னாகத்தில்

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன

தினமும் மாலை 6மணி முதல் கொலுப்பூசையும் சுவாசினி பூசையும் நடைபெறுகின்றன

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானம்பூ உற்சவம் ஆலய முன்றலில் நடைபெறும். (உ)

### வதிரியில்

கரவெட்டி, அக். 11

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் வாணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்

இவ்விழாவில் சமய அரங்கிற்கு வதிரி சைவ சமய பாதுகாப்புச்சபை துணைத்தலைவர் திருமதி சந்திரலேகா பேரின்பநாயகமும் உபந்நியாச அரங்கிற்கு ஆலய சபைத் தலைவர் திரு. சூரன் ஏகாம்பரமும் தலைமை வகிப்பர். யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பார்வதி கந்தசாமி சிறப்புரை வழங்குவார்.

கலை அரங்கிற்கு சைவ சமய பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு ஆ. க. கதிரேசன் தலைமைவகிப்பார் வைத்திய கலாநிதி திரு. சி. மாசிலாமணியும் விழாவில் கலந்துகொள்வார்

(உ-70)

### சாவகச்சேரியில் தமிழ்த்தினப் போட்டி

சாவகச்சேரி, அக். 11

சாவகச்சேரி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்த் தினப் போட்டிகள் மகளிர் கல்லூரி வித்தியாலயத்தில் நடைபெற்றன. வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தம்பிராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது (இ)

## மூன்றுவது கட்டப் பேச்சு: சிக்கல் கட்டமாகிறது

தென் இலங்கை கொதிக்கிறது; திருமலை, எரிமலையாகிக் கொண்டிருக்கிறது.

திருமலை இல்லாத தமிழ் மாகாணத்தையோ, மாநிலத்தையோ எண்ணிப்பார்க்க முடியாத நிலையில் தமிழன் இருக்கின்றான்.

கொழும்புப் பேச்சுக்களின் போது வவுனியா கொதிப்பாகவுமானது

மூன்றும் கட்டப் பேச்சுக்கு முன்னரே திருமலை, எரிமலையாகத் தொடங்கிவிட்டது.

இலங்கையில் தமிழருக்கு தனி மாகாணம் வேண்டும்- இப்படி மிதவாத தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்திய அரசுக்கு, இந்திய சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன் மூலம் அறிவித்துவிட்டது.

புதுடில்லியில் இந்திய அரச அதிகாரிகளுடன் இலங்கையின் பிரதிநிதிகள் உரையாடல் 14 மணித்தியாலங்கள் பரிசீலனை செய்த பின்னரே, தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசுக்கு தனது நிலையை அறிவித்தது.

தமிழ் மாகாணம் அமைக்க எல்லைநிர்ணயக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்ற இலங்கை அரசின் யோசனையையும் கூட்டணி நிராகரித்து விட்டது.

### இந்திய ஆசீர்வாதம்

கூட்டணியின் இந்த நிலை, டில்லியின் ஆசீர்வாதத்துடன்தான் எடுக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் "பரமசிவன் கழுத்தில் இருந்த பாம்பு கேட்டகதை" தானே தொடர்ந்து நடைபெறுகின்றது.

தமிழ்மாகாணக் கோரிக்கையை சிரணிக்க முடியாத நிலை புலிகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

மாகாணசபை யோசனைகளையே ஏற்கவைக்க முடியாத நிலையில் தமிழ் மாகாணக் கோரிக்கையை தென் இலங்கை மீது எப்படித் திணிப்பது?

இச்சூழ்நிலையில் மூன்றும் கட்டப்பேச்சுக்களில் போராளிகளும் பங்கு பற்ற வேண்டும் என்பதில் இந்திய அக்கறை காட்டுகின்றது.

மிதவாதத் தமிழ்த் தலைமையே தமிழ் மாகாணக் கோரிக்கையை முன்வைத்துள்ளது என்றால்—

'தமிழ் ஈழமே' மூச்சாகக் கொண்டு செயல்படும் போராளித்தலைமை எந்தக் கோரிக்கையை மூன்றும் கட்டப் பேச்

### உள்ளம் பறமும்

குறுமுனி

சில்போது முன் வைக்கும்?

பொறுத்து இருந்து பார்ப்போம்

பெரும் சிக்கல் கட்டமாகத்தான் மூன்றுவது கட்டம் இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டியுள்ளது!

### பிறந்தநாள் பிரச்சினை

அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட சிறில் மத்தியூவின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டதாலும் அவர் சிங்கள சேர்ந்த இளம் எம். பி. பற்றி ஐ. தே. க. மேலிடம் தீவிரமாக விசாரணை செய்து வருகிறது இந்த எம். பி. தென் இலங்கையைச் சேர்ந்தவர்.

இடைத் தேர்தல் ஒன்றின் மூலம் எம். பி. யானவர் இந்த எம். பி. அதற்கு முதல் இந்த எம். பி. சிறில் அமைச்சராக இருந்த சமயம், கூட்டுத்தாபனம் ஒன்றில் இயக்குநராக பணியாற்றியவராம்

### மக்கள் இல்லாத கூட்டம்

மாகாணசபையை எதிர்த்து சுதந்திரக்கட்சி பொதுக் கூட்டம் நடத்தும் இடங்களில் எல்லாம் யு என். பி யும் கூட்டங்களை நடத்தி வருகின்றது.

அந்த வரிசையில் கடந்த வியாழன் நுகேகொடையில் யு என் பிக் கூட்டம் நடந்தது.

சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆனால் யு. என். பி. நடத்திய கூட்டத்தில் சுமார் இரண்டாயிரம் பேர் வரையில் தான் கலந்து கொண்டனர் என்று தெரிய வருகின்றது.

கூட்டத்திற்கு மக்கள் நிறைய வரவில்லை என்று ஆளும் கட்சி உயர் வட்டாரமே கவலைப்பட்டதாம்.

மாகாணசபைக் குண்டு' வெடித்துவிடும் என்று பயந்தாலும் மக்கள் வராமல் இருந்திருக்கலாம் என்று எண்ணி ஆறுதல் அடைய வேண்டியதுதான்

## மற்றவரது தனித்துவத்தை..

(2ம் பக்கத் தொடர்ச்சி) கள் நீண்டகாலம் இருக்கும்.

கேள்வி; மொழி, முக்கிய பங்கு வகிக்கும் ஒன்று என்று உணருகிறீர்களா?

பதில்; நிச்சயமாக. ஆங்கிலம் நிறுத்தப்பட்டதால் தலைமுறை ஒன்றை இழந்துவிட்டோம். மொழிவாரியாக மக்கள் பிரிக்கப்பட்டதால் சிங்களவர் சிங்களத்தையே படித்தனர். தமிழர் தமிழையே படித்தனர். இரண்டு இனங்களையும் இணைக்கக்கூடிய மொழி ஒன்று இல்லை; மொழிப் பிரச்சினை பற்றி ஆங்கிலத்தில் சண்டைபிடிக்கும் உயர்மட்ட வாதிகளைத் தவிர.

நாம் பல் இன சமூகம். இணைப்புமொழி ஒன்று எமக்குத் தேவை. ஒருவர் மொழியை மற்றவர் படிக்க வேண்டும். தாகூரினதும், பெளதீகம் ஆகிய பாடங்களைச் சிங்களவர் படிக்கமுடியும் என்றால் ஏன் ஆங்கிலத்தையும் தமிழையும் அவர்களால் படிக்கமுடியாது?

மொழி வெறும் தொடர்பு சாதனம் என்று நான் நினைத்த காலம் ஒன்று உண்டு. இப்போது தான் நன்றாகப் புரிந்துகொண்டேன். ஒருவரின் கனவுகளை மொழி பிரதிபலிக்கின்றது. ஒருவரின் சிந்தனையின் சின்னங்கள்தான் வார்த்தைகள்.

ஒருவர் கனவுகாணும், எண்ணும், திட்டும் மொழி எது என்பதைக் கண்டுபிடியுங்கள். அப்போது ஒருவரின் கலாசார வேர்கள் தெரியும்.

கேள்வி: இருண்ட குகையின் தொலைவில் எமக்கு ஒளி தெரியுமா?

பதில்: பலதரம் கெட்டகாலங்களை எமது நாடு சந்தித்து வந்துள்ளது மீண்டும் ஒருமுறை ஒரு நாடாக வருவது நிச்சயம்.

## நன்மை பயக்கின்ற...

(7ம்-பக்கத் தொடர்ச்சி) ஒலி நிறமுறைகளினாலும் அழிக்காது அவற்றின் பெருக்கத்திற்கு வழி அமைத்தல். தொடர்ச்சியாக பரந்தமுறையில் இரசாயன மருந்து பாவிப்பதை தவிர்த்தல், தெரிந்தெடுத்த சிபாரிசு பண்ணப்பட்ட பூச்சி நாசினிகளைப் பாவித்தல், நன்மைபயக்கும் பூச்சி இனங்களை அழிக்காத இலகுவான மருந்துகளைப் பாவித்தல், இரவ மருந்துகளைத் தவிர்த்து குருணல்களைப் பாவித்தல், குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் மருந்துகளைப் பாவித்தல், இரசாயன மருந்துகளை, வயலில் பொருளாதார பாதிப்பு மட்டம் ஏற்படும் பொழுது மாத்திரம் பாவிக்கவும். சர்வ பூச்சி நாசினிகளை பாவிப்பதைக் குறைக்கவும்.

### நன்மை பயக்கும் உயிரினங்கள்

பறவைகள்; மைனா, கொக்கு, ஆட்காட்டிக் குருவி.

தவளைகள், நிலத்திலும் நீரிலும் வாழ்பவை.

மீன்கள்: குளம், குட்டை, ஏரி, (நன்னீர் மீன் குளங்கள்)

சிலந்தி: வலைபின்னும் சிலந்தி, பாய்ந்து பிடித்துண்ணும் சிலந்தி.

பூச்சிகள்: தும்பி, குளவிகள், ஊசித்தும்பி, தத்துவெட்டி, நீரில் வாழும் பூச்சிகள்.

விலங்குப்புழு: ஒர் சில இனங்கள்.

பூஞ்சணங்கள்; பூச்சிகளின் மேல்பரவி அவற்றை அழிக்கும் ஆற்றல் கொண்டவை

### சிலந்தி

சிலந்திகளை வலை பின்னும் சிலந்தி, பாய்ந்துண்ணும் சிலந்திகள் என இருவகையாகப் பிரிக்கலாம். இவை 4-25மி மீ வரை உருவமைப்புக் கொண்டது. பல நிறங்களில் சுற்றுடலுக்கு ஏற்றவாறு காணப்படும். வயலில் காணப்படும் எல்லா இன சிலந்திகளும் பயிருக்குத் தீமை விளைவிக்கும் சிறிய பூச்சிகளை தாம் பின்னும் வலையின் மூலமாக வைத்தும், பாய்ந்து பிடித்தும் உண்கின்றன. சிலந்தியின் முட்டைகள் ஒரு பையினுள் மூடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது. சிலந்தி அனங்குகள் பொரித்த உடனேயே சிறு பூச்சிகளைப் பிடித்துண்ணும் ஆற்றல் உள்ளவை. இவற்றிற்கு 2 உடம்புப்பகுதியும், 8 கால்களும், கூட்டுக்கண்களும் உண்டு. ஆண் சிலந்தி பெண் சிலந்தியிலும் பார்க்கச் சிறியதாகவும் வயிறு பெரிதாகவும் இருக்கும். பாய்ந்துண்ணும் சிலந்திகள், பூச்சியின் மேல் விஷத்தைப் பாய்ச்சி அவற்றைச் செயலிழக்கச் செய்தபின் உமிழ் நீரைக் கசிந்து அவற்றின் சாறை உறிஞ்சிக் குடிக்கின்றன. சில சிலந்திகள் தமது கால்களினால் பூச்சிகளைப் பிடித்து வாயினால் கடித்து உண்ணக் கூடியவை.

(வளரும்)

## "திருமலை தமிழரைக் காப்பாற்றுக"

சென்னை, அக் 10

திருகோணமலைத் தமிழரைக் காப்பாற்ற சாத்தியமானது ஒன்றைச் செய்யுங்கள்.

கூட்டணிச் செயலதிபர் திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறுகோரும் தந்திச் செய்தியை இந்திய வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கருக்கு அனுப்பிவைத்தார்.

இதுசம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் வெளியுறவுச் செயலாளர் ஏ பி. வெங்கடேஸ்வரன், ஆலோசனைக் குழுத் தலைவர் ஜி. பார்த்தசாரதி, இணைஅமைச்சர் பி.சிதம்பரம் ஆகியோருடன் தொலைபேசிமூலம் நேரடியாகத் தொடர்புகொண்டார்.

திருமலைத் தமிழர்மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது இந்தியாவின் நல்லெண்ணம் என்பது அர்த்தமற்றதாகி விட்டது''—இப்படி திரு அமிர்தலிங்கம் அவர்களிடம் தெரிவித்தார்.

(உ-ஐ-எ)

### முடிவு திகதி பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 11

1983ஜனவரி தொடக்கம்1986 செப்டம்பர் 30 வரையான காலப்பகுதியில்வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களின்பாதிப்புக் குறித்த மதிப்பீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து மீளக் கையளிப்பதற்கான திகதி இம்மாதம் 15ஆம் திகதிவரை பின்போடப்பட்டுள்ளது திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார். (உ-5)

## கிளிநொச்சியில் கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், அக்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் செப்டம்பர்மாத ஓய்வூதியம் அம்மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகள்மூலம் செலுத்தப்படவுள்ளன.

அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன என்று கிளிநொச்சிக் கச்சேரிக் கணக்காளர் திரு. திரு. கா வீரசிங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

கிராமிய வங்கிகளில் கணக்குகளைத் திறந்துள்ளவர்கள் சம்பந்தப்பட்ட கிராமிய வங்கிகளுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (உ-எ)


**உதயன் - சஞ்சீவி**

**சந்தா விவரம்**

உள்நாடு

| காலம் | உதயன் ரூ. ச | சஞ்சீவி ரூ. ச | உதயனும் சஞ்சீவியும் ரூ. ச. |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 313·00 | 104·00 | 417·00 |
| 06 மாதம் | 156·50 | 52.00 | 208·50 |
| 03 மாதம் | 78·50 | 26,00 | 104·50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரூ. ச | ரூ. ச | ரூ. ச. |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469 50 | 156-00 | 625-50 |
| 06 மாதம் | 234-75 | 78-00 | 312-75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விவரங்கள் மாற்றத்துக்குரியன



**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

திகதி:- 11 — 10 — 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org